# போராட்டம்

2015 ஜனவரி இதழ் 18 இப்பத்திரிகை மக்கள் போராட்ட இயக்கத்தின் வெளியீடு 20.00 ரூபா



# மக்களது அபிலாசைகளை வென்று எடுப்பதற்காக போராடுவோம்!

ஜனாதிபதித் தேர்தல் மூலம் புதிய ஜனாதிபதியும் அதனைத் தொடர்ந்து ஒரு புதிய அரசும் தெரிவாகியுள்ள போதிலும் ஜனநாயகம் தொடர்பானதும் பொருளாதாரரீதியான மேம்பாடுகள் தொடர்பான மக்களது அபிலாஷைகள் நிறைவேறப்போவதில்லை என்பதற்கான தெளிவான அறிகுறிகள் தென்படுகின்றனதென முன்னிலை சோஷலிசக் கட்சி கருதுகின்றது. புதிய அரசாங்கத்தின் ஆரம்பம்பத்திலேயே அதன் நடவடிக்கைகள் கடுமையான விமர்சனங்களை எதிர்கொள்ளும் நிலமைக்குள் தள்ளப்பட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தலின்போது பிரகடனம் செய்து கொண்ட தனது கொள்கைகளுடன், அரச அதிகாரிகளின் நியமனம், மற்றும் பரவலாக இடம்பெற்றுவரும் அரசியல் பழிவாங்கல்களும் ஜனாதிபதி தேதர்தலின்போது மைத்திரிபால சிறிசேனாவுக்கு ஆதரவாகவிருந்தவர்கள் மத்தியிலும் அதிருப்தியினை உருவாக்கியிருக்கிறது.

அதேவேளை புதிய அரசாங்கமும் எந்த மாற்றங்களும் இன்றி நவலிபரல்வாத முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கையே தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதனையே அவதானிக்ககூடியதாக உள்ளது இந்த நிலமைகளின் மத்தியில், மக்களுடைய ஜனநாயக அபிலாசைகள் நிறைவேற்றப்படமாட்டாதென்பதே தெளிவாகி வருகின்றது.

இந்த நெருக்கடிகளை எதிர்கொள்ளுகின்ற அதேவேளை, ஒரு நல்லாட்சி பற்றிய விவாதங்களினூடு வெற்றிகொள்ளப்பட்ட ஜனநாயகத்தின் பாரம்பரிய கோரிக்கைகளைக் கூட ஆளும் வர்க்கமானது கண்டுகொள்ளாமல் போவதற்கான நிலமைகள் எழுந்திருக்கின்றன. ஜனநாயக கடமைகள் பற்றிய விவாதங்கள் வேறு விடயங்கள் பற்றிய அரசியல் சர்ச்சை என்ற புகைமூட்டத்துக்குள் மறைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு மறைந்துபோயுள்ள ஜனநாயக கடமைகளை நிறைவேற்றகோரும் முன்னெடுப்புக்களை கட்சி திட்டமிடுகிறது.

இலத்திரனியல் அடையாள அட்டை, மாணவர்கள் மற்றும்

11 ஆம் பக்கம் பார்க்க...




யாழ்நகர் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகங்களுடனான சந்திப்பின் போது முன்னிலை சோஷலிஸக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் தோழர் குமார் குணரத்தினம் உரையாற்றுகிறார்

# மருந்துப்பொருள் மாபியாக்களுக்கு எதிராக போராட ஒன்றுபடுவோம்.

மருந்துப்பொருள் விற்பனை மாபியாக்களின் பிடிக்குள் சிக்கித் தவிக்கும அப்பாவி மக்களை மீட்டெடுக்கின்ற பரந்துபட்ட போராட்டத்தின் தேவையை வலியுறுத்துகின்ற அதேவேளை மாணவர் இயக்கங்களும் சுகாதார சேவைத்துறைச் சங்கங்களும் ஒன்றிணைந்து போராட்டத்தினை முன்எடுத்துச் செல்லவுள்ளன.

புதிதாக பதவிக்கு ஏற்றுள்ள அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலின் போது தேசிய மருந்துக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்படுத்தும் என வாக்குறுதியினை வழங்கியிருந்தது.- ஏழை ஏளிய நோயாளர்களை கிஞ்சித்தும் கவனத்தில் கொள்ளாது மருந்து விற்பனைக் கம்பனிகளின் இலாபமீட்டும் நோக்கத்துக்கு ஏற்புடையதாகவே புதிய மருந்து கொள்கை வரைவுகள் உருவாக்கப்படுகிறது. உதாரணத்துக்கு தற்போதைய

11 ஆம் பக்கம் பார்க்க...




7 ரத்துபஸ்வல சுன்னாகம் துன்னான





4 தமிழ் பேசும் மக்களின் தேசியப் பிரச்சினை நாம் என்ன செய்ய வேண்டும்?





3 வடக்கில் இடதுசாரி இயக்கம் ஆரம்பம்

# உரிமைகளை பெற போராடியே தீர வேண்டும்!

தேர்தலின்போது மட்டும் அரசியலில் ஈடுபட்டுவிட்டு தேர்தல் முடிந்த பின்னர் வாழாதிருப்பின் மக்களால் எந்த வெற்றியையும் பெற முடியாது எனக் கூறும் முன்னிலை சோஷலிஸக் கட்சி 100 நாட்களுக்குள் பாரிய மாற்றத்தை செய்ய முடியாவிட்டாலும், ஆகக் குறைந்த மறுசீரமைப்புகள் சிலதையாவது பெற்றுக் கொள்ள மக்கள் போராட வேண்டுமெனக் கூறுகிறது.

ஜனவரி 17ம் திகதி கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பின் போதே முன்னிலை சோஷலிஸக் கட்சி மேற்கண்டவாறு கூறியது. அந்த ஊடக சந்திப்பின் போது மேலும் விளக்கமளித்த அதன் பிரச்சார செயலாளர் தோழர் புபுது ஜயகொட, “இந்த அரசாங்கம் தனது நோக்கத்தை இரு ஆவணங்களாக முன்வைத்துள்ளது. ஒன்று கொள்கை வெளியீடு. இது குறித்து நாங்கள் தேர்தலுக்கு முன்பும் பேசினோம். இந்த கொள்கை மீது கடுமையான விமர்சனமும் எமக்கு உள்ளது. வெற்று செக் (Blank cheque) தாளைக் கையில் கொடுத்து விரும்பிய தொகையை எழுதிக் கொள்ளுமாறு ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டாமென நாங்கள் கூறினோம். இருந்தபோதிலும், 60 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் மைத்திரிபால சிறிசேன மீது நம்பிக்கை வைத்துள்ளனர். அதேபோன்று, தேர்தலின் பின்னர் மக்களுக்கு நிம்மதிப் பெருமூச்சு விடமுடியாதெனவும், உண்மையான அரசியல் போராட்டம் 9ம் திகதிக்கு பின்புதான் தொடங்கப்படவிருக்கிறது எனவும் கூறினோம். அரசாங்கம் 100 நாள் வேலைத்திட்டத்தை முன்வைத்திருக்கிறது. இதுதான் இரண்டாவது ஆவணம். இலக்கை நிறைவேற்றும் திகதிகளுடன் வேலைத்திட்டத்தை முன்வைத்திருப்பது பயன்தரக் கூடியதாக இருக்குமென நாங்கள் கருதுகிறோம். ஆனால், அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக மக்கள் போராட வேண்டியிருக்கும். அதிகாரத்தை உறுதி செய்து கொள்வதற்கான செயற்பாடுகளுக்காக அவசரப்பட்டாலும். இந்த வேலைத்திட்டத்தில் குறித்திருக்கும் ஏனையவற்றை நிறைவேற்றிக் கொள்ள மக்களிடமிருந்து அழுத்தம் தேவைப்படுகிறது. உதாரணமாக, 100 நாள் வேலைத்திட்டத்திற்கு ஏற்ப, 10ம் திகதி ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்ய வேண்டும். பிரதமர் 11ம் திகதியே பதவிப் பிரமாணம் செய்ய வேண்டுமென குறித்திருந்தாலும் அவை இரண்டும் குறித்த திகதிக்கு முன்பே அதாவது 9ம் திகதி மாலை நடந்தேறியது. அதில் எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால், ஏனையவற்றுக்கும் அந்த அவசரம் உள்ளதா? அரசியலமைப்பு திருத்தம் சம்பந்தமான ஆலோசனைச் சபை 12ம் திகதி நியமிக்கப்படுமென கூறப்பட்டாலும், இதுவரை நியமிக்கப்படவில்லை. 20ம் திகதி பாராளுமன்ற கண்காணிப்புக் குழுவை நியமிப்பதாக கூறப்பட்டது. அதுவும் தாமதிக்கப்படுவதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. இவற்றை விரைவில் முழுமையாக நிறைவேற்றிக் கொள்ளவும் போராட வேண்டியுள்ளது. அரசியலமைப்பு திருத்தத்தை எடுத்துக் கொண்டாலும், நடைமுறையிலிருக்கும் அரசியலமைப்பிற்கு மேற்பூச்சான திருத்தத்தைக் கொண்டுவருவதற்குப் பதிலாக, ஜனநாயகத்தை பாதுகாக்கும் புதிய அரசியலமைப்பிற்காக மக்கள் போராட வேண்டும். அரசியமைப்பைத் தயாரிக்கும் சபைக்கு உண்மையான மக்கள் பிரதிநிதிகளை நியமித்துக் கொள்ள மக்கள் போராட வேண்டும். எந்தவொரு அரசியலமைப்பும் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்படுவதாயிருந்தால் அதற்கு மக்கள் விருப்பம் பெறப்பட வேண்டும். என்றாலும், மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தாமல், பாராளுமன்றத்திலேயே நிறைவேற்றிக் கொள்வதாக நூறுநாள் வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது விடயத்தில் மக்கள் தலையிடாவிடினும், பாராளுமன்றக் குழுவின் மூலம் அரசியலமைப்பு திருத்தத்தை சமர்ப்பித்து பாராளுமன்றத்திலேயே நிறைவேற்றிக் கொள்வார்கள். பாராளுமன்ற சுவர்களுக்குள் நடக்கும் செயற்பாடுகளுக்கு நாங்கள் சம்பந்தப்பட மாட்டோம். மக்கள் பங்களிப்போடு நடக்கும் முழுமையான அரசியலமைப்பு திருத்தத்திற்கு மாத்திரமே நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவோம். 100 நாள் வேலைத்திட்டத்தின் ஒவ்வொரு விடயம் சம்பந்தமாகவும் மக்களுக்கு போராட்டமொன்று உள்ளது. அது மட்டுமன்றி, இந்த 100 நாள் வேலைத்திட்டத்திற்குள் மக்களின் ஆகக்குறைந்த எதிர்பார்ப்புகளையாவது நிறைவேற்றிக் கொள்வதாயிருந்தால், சமூக வற்புறுத்தலொன்று அவசியமாகும். கட்சி என்ற வகையில் நாங்கள் மக்கள் அமைப்புகளையும் இணைத்துக் கொண்டு அதற்கான திட்டத்தை வகுக்கவுள்ளோம். அவற்றை செயற்படவைக்க மக்கள் கருத்தை உருவாக்குவோம். ஊழல் சம்பந்தமாக விசாரிக்க சிறப்பு விசாரணை சபை நிறுவப்படுமென இந்த வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அது மட்டும் போதாது. பாரிய ஊழல் மோசடிகள் சம்பந்தமாக மாத்திரம்தான் விசாரிக்கப்படுமா? கொலைகள் சம்பந்தமான விசாரணைகள் கிடையாதா? தண்டனை ஊழல் மோசடிகளுக்கு மட்டுமா? கொலைகாரர்களுக்கு தண்டனை கிடையாதா? கடந்த காலங்களில் அரசியல் காரணமாக பலர் கொல்லப்பட்டனர். லசந்த விக்ரமதுங்க கொலை சம்பந்தமான விசாரணைகளுக்கு என்ன நடந்தது? கட்டுநாயக்க தொழிலாளர் போராட்டத்தின்போது ரொஷான் சானக கொல்லப்பட்டார். துப்பாக்கி சூட்டுக்கு உத்தரவிட்டவர் யாரென்பதை விசாரிக்க வேண்டும். ரத்துபஸ்வல மக்கள் போராட்டத்தின்போது மக்கள் மீதா துப்பாக்கிச் சூட்டுக்கு உத்தரவிட்டது யார்? மீனவர் போராட்டத்தின்போது அந்தோனியை சுட்டுத்தள்ள உத்தரவிட்டது யார்? இவைகள் சம்பந்தமாக விசாரிக்கப்பட மாட்டாதா? மாணவர் தலைவர்களான ஜானக மற்றும் சிசித திடீர் வீதிவிபத்து என போக்குக் காட்டும் விதத்தில் கொல்லப்பட்டனர். இது சம்பந்தமாக பொலிஸார் நீதிமன்றத்திற்கு வழங்கிய அறிக்கை கூட தவறானது. இதன் உண்மையை அறிய விசாரணை குழு தேவைப்படுகிறது. பெருமளவானோர் காணாமலாக்கப்பட்டனர். ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமலாக்கப்பட்டார். எமது கட்சியின் லலித் மற்றும் குகன் காணாமலாக்கப்பட்டு 3 வருடங்கள் கடந்துள்ளன. இவை குறித்து விசாரிப்பதாயிருந்தால் அது சம்பந்தமான தகவல்கள் எங்களால் தர முடியும். எமது அரசியல் சபை உறுப்பினர்களான குமார் குணரத்தினம் மற்றும் திமுது ஆடிகல ஆகியோர் வெள்ளை வானில் கடத்தப்பட்டு அதிஷ்டவசமாக உயிர் பிழைத்தனர். ஜோன் த சில்வா அரங்கத்தின் பிரதான பாதுகாப்பு அதிகாரியை கடத்தி கடுமையாக தாக்கி மீண்டும் கொண்டு வந்து விட்டனர். விசாரணை நடத்துவதாயிருந்தால் இவர்களிடமிருந்து தகவல்களைப் பெற முடியும். விசாரணைக்குழு நியமிக்கப்படுவதால் நியாயம் கிடைக்குமென நாங்கள் ஏற்றுக் கொண்டாலும் இல்லாவிடினும் குறைந்தபட்சம் இதையாவது செய்யாவிட்டால் மக்களுக்கு எந்த வெற்றியும் கிடைக்கப் போவதில்லை. பத்து நாட்களுக்குள் கணக்காய்வு சட்டம், தகவல் அறியும் சட்டம் போன்ற சட்டங்கள் போன்றவற்றை கொண்டு வருவதாக கூறுகிறார்கள். பயங்கரவாத தடுப்புச் சட்டம், வெகுஜன பாதுகாப்புச் சட்டம் போன்ற அடக்குமுறை சட்டங்கள் ரத்து செய்யப்பட மாட்டாதா? அவற்றை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். வடக்கில் இராணுவ ஆட்சியை ஒழித்து சிவில் நிர்வாகத்தை ஸ்தாபிக்க வேண்டும். அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும். அதன் முதற்கட்டமாக இரண்டு மூன்று நாட்களுக்குள் எவ்வித குற்றச்சாட்டுமின்றி 10, 20 வருடமாக தடுப்புக்காவலில் வைத்திருக்கும் நபர்களை விடுதலை செய்ய வேண்டும். இவற்றுக்கு பணம் செலவழிக்க வேண்டியதில்லை. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் தேவைப்படாது. அவற்றை நிறைவேற்றுமாறு மக்கள் போராட்டத்தின் ஊடாக வலியுறுத்த வேண்டும். ஒரே கடிததத்தால் சிலவற்றை செய்ய முடியும். இலத்திரனியல் அறிமுக அட்டை ரத்து செய்யப்படமாட்டாதா? உயர்தர மாணவர்களுக்கு, அதிபர்களுக்கு வழங்கும் கட்டாய இராணுவப் பயிற்சி இவ்வருடத்திலிருந்து நிறுத்தப்பட வேண்டும். கடந்த காலத்தில் சர்வாதிகார ஆட்சி நிலவியது. அந்த ஆட்சியை தோற்கடிப்பதாக உறுதியளித்தவர்கள் இவற்றை செய்து காட்ட வேண்டும். அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சிலரின் சேவைகள் நிறுத்தப்பட்டன. நூற்றுக்கணக்கான மாணவர் தலைவர்கள் விரிவுரைகளுக்கு சமூகமளிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டனர். அவர்களது தண்டனை ஒழிக்கப்பட வேண்டும். இவற்றை செய்யாமல் ஜனநாயகத்தை நிலைநாட்டுவது எப்படி? இதற்காக நாங்கள் மக்கள் கருத்தை உருவாக்க, மக்கள் பலத்தை கட்டியெழுப்ப, இக்கோரிக்கைகளுக்கான தீர்வை ஆட்சியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள முன்னின்று செயற்படுவோம். மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதாயின் பொதுவான விடயங்களிலிருந்து தொடங்க முடியும். கல்வியைப் பற்றி பெரிதாக கதையளப்பதை விட்டுவிட்டு பாடசாலைகளில் பணம் அறவிடுவதை தடை செய்து சுற்றறிக்கை அனுப்புங்கள். வடமேல் மாகாண சபையின் அதிகாரம் முற்றாக அரசாங்கத்தின் கைக்கு வந்திருப்பதால், அங்கு நீர்வளம் விற்கப்படுவதற்கு கொண்டுவரப்பட்ட

11 ஆம் பக்கம் பார்க்க...

# தமிழ் கூட்டமைப்பின் தொடரும் காட்டிக்கொடுப்புகள்!!!



வெண்நுரை அலைகள் கரையொதுங்கும் முல்லைக்கடலின் கரைகளில் உறைந்து கல்லாகி உடல்கள் மிதந்தன. ஆதரவு தேடி, அபயம் தேடி தாயின் கை பற்றி பசித்த வயிறுடன் பதுங்குகுழிகளில் தூக்கம் தொலைத்த குழந்தைகளின் கண்கள் மட்டுமே அந்த இருளில் ஒளிரும் ஒரே வெளிச்சமாக இருந்தது. வெளியே மகிந்த ராஜபக்சவின் பேரினவாதம் வீசிய குண்டுகளில் தமிழர்களின் வாழ்வும், வளமும் வெடித்துப் பறந்தன. சரத் பொன்சேகாவின் இராணுவம் கதியிழந்த மனிதர்களை கொலை செய்து காலில் போட்டு மிதித்தது. மைத்திரி சிறிசேனா, பதில்பாதுகாப்பு அமைச்சர் பாதுகாப்பு தேடி ஓடிய மனிதர்களை பயத்தில் உயிர் உறைந்து போன மனிதர்களை கொத்துக்குண்டுகள் வீசிக் கொன்றார்.

தமிழ் மக்களின் இனப்படுகொலை 2009 வைகாசியிலே நடந்தது. 26.01.2010 அன்று நடந்த இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்களை கொல்ல ஆணையிட்ட மகிந்த ராஜபக்சவும் அதை நடைமுறைப்படுத்திய சரத் பொன்சேகாவும் போட்டியிட்டனர். கொல்லப்பட்ட மக்களின் குருதி காய்ந்திருக்கவில்லை. தப்பிப்பிழைத்தவர்களின் காயங்கள் ஆறியிருக்கவில்லை. ஆயிரக்கணக்கானவர்கள் முள்வேலிச்சிறை முகாமிற்குள் தடுக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அந்த தேர்தலில் தமிழ்க்கூட்டமைப்பு இனப்படுகொலையாளிகளில் ஒருவரான சரத் பொன்சேகாவை ஆதரித்து தமிழ் மக்களின் மேல் ஏறி மிதித்தது.

யுத்தத்தின் இறுதிநாட்களில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தது மைத்திரியே என்று மற்றொரு கொலையாளி சந்திரிகா குமாரதுங்கா பெருமை பொங்க சாட்சியம் அளித்தார். சிங்கள இனவெறியர்களின் அமைப்பான கெல உருமய மைத்திரியின் கூட்டணியில் இருந்தது. எழுபத்தேழிலும், எண்பத்து மூன்றிலும் தமிழ்மக்களின் மேல் இனக்கலவரங்களை திட்டமிட்டு கட்டவிழ்த்து விட்ட அய்க்கிய தேசியக் கட்சி மைத்திரியுடன் இருந்தது. வன்னியில் தமிழ்மக்களின் நிலங்களை அடாவடியாக பறிக்கும் ரிசாத் பதியுதீன் போன்ற சில்லறைக் கள்ளர்கள் இருந்தார்கள். ஆனாலும் தமிழ் கூட்டமைப்பு இப்போது முள்ளிவாய்க்காலின் இறுதி நாட்களில் பாதுகாப்பு அமைச்சராக இருந்து கொத்துக் குண்டுகளை வீசி தமிழ்மக்களை கொன்ற மைத்திரி சிறிசேனாவை ஆதரித்தது. இப்போது மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, சோபித தேரர், சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ரவுப் ஹக்கீம், ரிசாத் பதுயுதீன், சரத் பொன்சேகா, பாட்லி சம்பிக்க ரணவக்க போன்ற மகிந்த ராஜ்பக்சவுடன் கூடிக் கொலை செய்தவர்களுடன், கொள்ளை அடித்தவர்களுடன், இனவெறியர்களுடன் தமிழ்க்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சேர்ந்து “தேசிய நிறைவேற்று சபை” என்ற அமைப்பின் மூலம் அரசியல் அமைப்பு திருத்தங்கள், கடந்த அரசின் ஊழல், சட்டவிரோத நடவடிக்கைகள், மனித உரிமை மீறல்கள், நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது நடைபெற்ற முறைகேடுகள், கொழும்பு மாநகரிலும், வட-கிழக்கு உட்பட நாடு முழுக்க நடைபெற்ற காணிக்கொள்ளைகள் என்பன தொடர்பாக ஆராயப் போகிறாராம்.

அரசியல் அமைப்பு திருத்தங்கள் பற்றி ரணில் விக்கிரமசிங்கா சம்பந்தருக்கு தெளிவுபடுத்தலாம். ஜெயவர்த்தனாவுடன் சேர்ந்து பயங்கரவாத தடைச்சட்டங்கள் என்று ஒவ்வொரு தமிழரையும் கேட்டுக் கேள்வி இன்றி கொலை செய்யவும், கைது செய்யவும் சட்டம் இயற்றியதை ஞாபகப்படுத்தலாம். சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க செம்மணிப்புதைகுழிகள், யாழ்குடா நாட்டைக் கைப்பற்றிய போது கொன்ற அப்பாவித் தமிழ்மக்கள், ஓயாத அலைகளின் போது கொன்ற மக்களின் ஓலங்கள் என்பவை மனித உரிமை மீறல்களா இல்லை என்று ஆராயலாம். முன்பு தமிழ் சிங்கள தலைமைகள் செய்து கொண்ட ஒப்பந்தங்களை எவ்வாறு இனவெறி கொண்ட பிக்குகளும், பேரினவாத அமைப்புகளும் கிழித்தெறிய வைத்தார்கள் என்பதை மறுவாசிப்பு செய்யலாம்.

மைத்திரிபால சிறிசேனா, ரவுப் ஹக்கீம், ரிசாத் பதுயுதீன் போன்றோர் பத்து வருடமாக மகிந்தாவுடன் இருந்து ஊழல், சட்டவிரோத நடவடிக்கைகள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றை செய்து விட்டு கடைசிநாட்களில் உத்தமபுத்திரர்களாக மாறுவது எப்படி என்பதை சம்பந்தருக்கு விளக்கிச் சொல்லுவார்கள். இந்தியா, மேற்கு நாடுகள் போன்ற மலைவிழுங்கி மகாதேவன்களுடன் டீல் வைத்திருக்கும் தங்களிற்கு இதெல்லாம் சர்வ சாதாரணம் என்று சம்பந்தன் பதிலுக்கு எடுத்து விடலாம்.

மக்களை இப்படி எவ்வளவு காலத்திற்கு இவர்கள் ஏமாற்றிக் கொண்டு இருக்கப் போகிறார்கள். வடமாகாண சபையின் ஆளுனராக பலிஹக்கார நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மகிந்த ராஜபக்சாவின் இனப்படுகொலைகளை அய்க்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் குறித்த கூட்டங்களின் போது நியாயப்படுத்தி பேசியவர், இனப்படுகொலையாளி மகிந்த தமிழ்மக்களைக் கொன்றது யார் என்று தனக்கு தெரியாதாம் என்று கண்டுபிடிப்பதற்காக அமைத்த “கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவில்” ஒரு உறுப்பினராக இருந்து தமிழ்மக்களின் வரலாற்றில் நிகழ்ந்த மாபெரும் அவலத்தை, தாங்கொணாக் கொடுமையை செய்தவர்களை தப்பிக்க செய்தவர்.

இப்படிப்பட்ட ஒருவரின் நியமனத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அல்லது எதிர்க்க முடியாத நிலையில் இருக்கிறது. இவர்கள் தானா கொல்லப்பட்ட தமிழ்மக்களின் ம்ரணங்களிற்கு நீதி கேட்டு போராடப் போகிறார்கள்?. இவர்கள் தானா தமிழ் மக்களின் பறிக்கப்பட்ட நிலங்களை மீட்டுத் தரப் போகிறார்கள்?. இவர்கள் தானா பேரினவாதிகளால் பாலியல்வன்முறை செய்யப்பட்ட நம் பெண்களின் கண்ணீரை துடைக்கப் போகிறார்கள்?. இவர்கள் தானா தாய், தந்தையரை இழந்து நடுத்தெருவில் நிற்கும் நம் குழந்தைகளின் எதிர்காலத்திற்கு பொறுப்பு சொல்லப் போகிறார்கள்?.

பொன்னம்பலம் அருணாசலம், பொன்னம்பலம் ராமநாதன், கணபதிப்பிள்ளை காங்கேசர் பொன்னம்பலம், செல்வநாயகம், அமிர்தலிங்கம் என்று அத்தனை சந்தர்ப்பவாத, வலதுசாரி தமிழ் தலைமைகளும் பேரினவாத சிங்களத்தலைமைகளும் இலங்கைத் தமிழ் மக்களை ஏமாற்ற செய்த சதித்திட்டங்கள் தான் இந்த ஒப்பந்தங்கள். பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம், டட்லி சேனநாயக்கா-செல்வநாயகம் என்பன என்றுமே நிறைவேற்றப்படவில்லை. சிங்களப் பேரினவாதிகளால் அவை காற்றிலே கிழித்து வீசப்பட்டன. இவை எல்லாவற்றையும் மறைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களைக் கொன்றவர்களிற்கே, தமிழ்மக்களின் உரிமைகளை காலில் போட்டு மிதித்தவர்களிற்கே தமிழ்மக்களை வாக்கு போடச் சொன்னது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களின் விரோதிகளை, தமிழ் மக்களின் வாழ்வை பறித்தவர்களை ஆதரிப்பதன் மூலம், நம்பச் சொல்வதன் மூலம் தமிழ் மக்களின் மேல் நடத்தப்பட்ட கொடுமைகளை மறந்து போகச் சொல்கிறது. கடந்து போகச் சொல்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழ்மக்களின் உரிமைகளிற்கான அமைப்பல்ல இந்தியாவும், மேற்கு நாடுகளும் சொல்வதற்கு தலையாட்டும் பொம்மைகள் என்பதை மீண்டும் மீண்டும் உறுதி செய்கிறது. மைத்திரிபால சிறிசேனா-ரணில் விக்கிரமசிங்கா ஆட்சியில் இந்திய, மேற்கு நாடுகள் தடையின்றி கொள்ளையடிப்பதற்காக தமிழ்மக்களின் வாழ்வை அடகு வைக்கிறது. தமிழ்மக்கள் தங்களின் பிரச்சனைகளிற்காக போராடக் கூடாது என்பதற்காக “தேசிய நிறைவேற்று சபை” எல்லாப் பிரச்சனைகளையும் தீர்க்கும் என்று கண்கட்டி வித்தை காட்டுகிறார்கள்.

சந்தர்ப்பவாத, பிற்போக்கு தலைமைகள் என்றும் மக்களின் பிரச்சனைகளை தீர்க்கப் போவதில்லை. அவை தங்களின் நலன்களிற்காகவே தமிழ் மக்களையும், சிங்கள மக்களையும் மோத விடுகிறார்கள்.

சிங்கள மக்கள் மத்தியில் பேரினவாதத்தினை நிராகரிக்கும் போக்கு ஆரம்பித்திருக்கும் அறிகுறிகள் தென்பட்ட போதிலும், தமிழ் மக்கள் குறுந்தேசியவாத பிற்போக்கு தமிழ் தலைமைகளிடமிருந்து தாங்கள் தங்களை விடுவித்துக் கொள்ளும் நடவடிக்கைகள் காணப்படவில்லை.

தங்களிற்கு தேவைப்படும் போது எல்லாவற்றையும் மறந்து கொலையாளிகளையே ஆதரிக்க சொல்கிறார்கள். இவர்களின் ஏமாற்றுகளிற்கு எதிராக ஒடுக்கப்படும் இலங்கை மக்கள் ஒன்று சேரவேண்டும். ஒடுக்கப்படும் மக்கள் ஒன்று சேருவதற்கு தடையாக இருக்கும் இனவாதம், இந்த கொள்ளையர்கள் மக்களைப் பிரிப்பதற்கு கருவியாக வைத்திருக்கும் இனவாதம் களையப்பட வேண்டும். மனித மனங்களிற்கு இடை நடுவில் ஒளி விடும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் நிறைந்த உலகிற்காக குரல் கொடுப்போம்.

# தமிழ் பேசும் மக்களின் தேசியப் பிரச்சினை



# நாம் என்ன செய்ய வேண்டும்?



இலங்கை ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் முடிந்து, யு.என்.பி தலைமையிலான கூட்டின் வேட்பாளர் மைத்ரி சிறிசேன வெற்றியடைந்துள்ளர். மைத்ரி வடக்குக் கிழக்கு மற்றும் மலையக தமிழ்மக்கள் மற்றும் முஸ்லீம் மக்களின் அமோக ஆதரவினாலேயே வெற்றியடைந்துள்ளார். மைத்ரிக்கு தமிழ் பேசும் மக்கள் (வடக்குக் கிழக்கு மற்றும் முஸ்லீம் மக்கள்) பெருமளவில் வாக்களித்துள்ளமை, மஹிந்தவின் ஆட்சியை கலைப்பதற்காக மட்டுமல்ல - அவர்கள் மீதான இனவாத ஒடுக்குமுறை மற்றும் தமக்கான அரசியற் தீர்வை எதிர்பார்த்தே! ஆனால், தேர்தல் காலத்தில் கூட மைத்திரி குழாம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கான தீர்வுகளைப் பற்றிக் கதைக்க மறுத்தது. இப்பின்னணியில், இன்றுள்ள மைத்ரி தலைமையிலான அரசு தேசியப் பிரச்சனைக்கு, மலையக மக்களின் உரிமைகளுக்கு சரியான தீர்வை வழங்கும் என்பதில் எமக்கு எந்தவித நம்பிக்கையும் இல்லை. இக்கட்டுரையின் நோக்கமானது இடதுசாரிகளான நாம் எந்த மாதிரியான தீர்வை முன்வைக்கின்றோம் என்பதைப் பதிவு செய்வதே. பல பத்து வருடங்களாக இலங்கையில் எரிந்து கொண்டிருக்கும் தேசியப் பிரச்சினைக்கான தீர்வைப் பற்றி ஒரு அரைப்பத்திரிகைப் பக்கத்தில் விரிவாகக் கூற முடியாவிட்டாலும், இவ்விடையம் பற்றி ஓரளவுக்கேனும் புரிதலை ஏற்படுத்துவதற்கும் - தொடர்ச்சியான தேடுதலையும் வாசிப்பையும் ஊக்குவிப்பதற்கும் இந்தப் பதிவு பயன்படும் என்பது எமது எதிர்பார்ப்பு.

## கோரும் இனவாத அரசியல்

2009 வைகாசி நடுப்பகுதியில், புலிகள் இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்ட தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம், பாரிய மனித அவலங்களுடனும், கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட மனிதர்களின் வலிமிகு ஓலங்களுடன், மஹிந்த தலைமையிலான ஆயுதப் படையினால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. 2009 இல் நடந்து முடிந்த யுத்த "வெற்றியை" முன்னிறுத்திய, பேரினவாத, இனவாத அரசியலே இன்றுவரை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. போர் முடிந்து சில மாதங்களிலேயே நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஒருபக்கம் யுத்தத்தை நடத்திய அரசுத் தலைவர் மஹிந்தவும், அவருக்கு எதிரான வேட்பாளராக, போரைத் தலைமைதாங்கி நிறைவுக்குக் கொண்டு வந்த தளபதி பொன்சேகாவும் போட்டியிட்டனர். இருவருக்கும் இடையிலான அதிகாரப் போட்டி, உண்மையிலேயே யுத்த "வெற்றியை" யார் உரிமை கொண்டாடுவதென்பதற்கான போட்டியாகவே அமைந்தது. அத் தேர்தலில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பிரதிநிதிகளாகத்

> **அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களும் தமது வர்க்க உரிமைகளை வென்றுகொள்வதற்காக உண்மையாகவே ஒன்றிணைய வேண்டுமாயிருந்தால், அதன் இன்றியமையாத பகுதியாக முதலில் ஆதிக்க சக்திகளின் ஏகபோக அரசாங்கத்தினால் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும்- பேசப்படக் கூடாத விடயமாகவே கையாளப்படும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கு சம உரிமைகளைப் வென்றெடுக்கும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.**

தம்மைக் கூறிக்கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடக்கம், முஸ்லீம் கட்சிகளும் போர்க்கனவான்களில் ஏதாவது ஒருவரை ஆதரித்தனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜெனரல் பொன்சேகாவை, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆதரித்தது. தற்போது 2015 ஜனவரியில் நடைபெற்று முடிந்த தேர்தல் பிரச்சாரங்கள் கூட மேற்படி போரின் வெற்றியை உரிமை கோரும் போட்டியாக நடத்தப்படுகிறது. மஹிந்த பக்கத்தாலும், அவருக்கு எதிராக நிறுத்தப்பட்ட மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி உட்பட, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா மற்றும் முன்னாள் ஜெனரல் பொன்சேகாவாலும் விகிதாசார அடிப்படையில் யுத்த வெற்றிக்கான உரிமை கோரப்பட்டது. 2014 மார்கழி மாதத்தின் முதல் வாரத்தில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா மாத்தறையில் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கீழ்க் கண்டவாறு உரையாற்றினார். "விடுதலைப் புலிகளுடனான போரின் 75 சதவீதத்தை நானே வெற்றிகொண்டேன். இந்தப் போரை நடத்தியதும் அதில் வெற்றிகொண்டதும் சரத் பொன்சேகாவே. போர் வெற்றியின் 75 சதவீதமானவை எங்களது ஆகும். நாம் விட்டுவைத்த 25 சதவீதத்தையே ராஜபக்ச அரசு வெற்றிகண்டது. இருப்பினும், யுத்தம் முடியும் போது, நாட்டின் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் மைத்திரிபால சிறிசேனவே" என அவர் மேலும் தெரிவித்தார்.

இவர்கள் உரிமை கோரும் போர் அழிவுகள் நடைபெற்று ஆறு வருடங்களுக்கு மேலாகும் நிலையில் தமிழ் தேசியப் பிரச்சினைக்கு எந்தவிதத் தீர்வுகளும் காணப்படவில்லை. தற்போது நடந்து முடிந்த தேர்தலில் கூட இரு தரப்பும், தமிழ் தேசியப் பிரச்சினையை பேசப்படக் கூடாத விடயமாகவே கையாண்டனர். சில அரசியல் விடயங்களில் இருதரப்பும் அரசியல் முரண்பாடுகளைக் கொண்டிருந்தாலும், தமிழ் பேசும் மக்களை ஒடுக்குவதில், கைச்சாத்திடப்படாத ஒப்பந்த உடன்பாட்டுடனேயே அரசியல் நடாத்துகின்றனர். இந்நிலையில் தமிழ் தேசிய இனம் மீதான ஒடுக்குமுறை வரலாறு காணாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

## முஸ்லீம் மக்கள் நிலை


இது ஒருபுறமிருக்க தமிழ்பேசும் சகோதர இனமான முஸ்லீம் மக்கள் மீதும் போர் முடிவுக்கு வந்த பின்னான காலத்தில் அரசினாலும், அதனால் இயக்கப்படும் இன-மதவாதக் குழுக்களினாலும் தொடர்ச்சியான வன்முறைகள் நிகழ்த்தப்பட்டு வருகிறது. இவ் வன்முறை அரசியலின் உச்சக் கட்டமாக ஆனி மாதம் 2014 இல் திட்டமிட்ட வகையில், அரச முக்கியஸ்தர்களின் ஆதரவுடன் பொதுபலசேனாவால் பேருவளை மற்றும் அளுத்கம பிரதேசங்களில் வாழும் முஸ்லீம் சகோதரர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டதுடன், முஸ்லீம்கள் மீது வன்முறையும் கொலைகளும் நிகழ்த்தப்பட்டது. அந்நிலையில் கொழும்புக்கும் பொதுபல சேனாவின் இன-மத வாதப் பயங்கரவாதம் பரவலாம் என்று மக்கள் அஞ்சிய நிலையில் இருந்தனர். எதிர்க்கட்சிகள், மற்றும் முஸ்லீம் மந்திரிகள் கூடப் பொதுபலசேனாவின் கொடுமைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் பயந்தனர். முஸ்லீம் சகோதரர்கள் மீதான இப் பயங்கரவாதம் நிகழ்த்தப்பட்டு இப்போது ஆறு மாதங்களுக்கு மேலாகியும், இப்படியான இன - மதவாதத் தாக்குதல்களைத் தவிர்க்க, அழிவுகளுக்கு ஈடுகட்ட எந்தவித நடவடிக்கைகளும் எவராலும் எடுக்கப்படவில்லை. அன்று முஸ்லீம் மக்களை பொதுபல சேனா தாக்கியபோது - மஹிந்த ஆட்சியில் அதிகாரத்துடன் ஒட்டியிருந்த முஸ்லீம் மந்திரிகள் மவுனம் காத்தார்கள். இப்போ மைத்ரியின் புதிய அரசுடன் ஒட்டிக்கொண்டு மஹிந்த தான் மேற்படி தாக்குதலுக்கு காரணம். பொது பல சேனாவை வளர்த்து விட்டது அவர் தான் எனக் குற்றம் சாட்டுகின்றனர். இது எதை எமக்கு உணர்த்துகின்றதெனில், ஒடுக்கப்படும் இனங்களின் அரசியல் கட்சிகள் தமது சுயநல தேவைகளை மட்டுமே முன்னிறுத்தி, சந்தர்ப்பவாதமாக அரசியல் செய்கின்றன என்பதையே! இந்தவகையில் ஒட்டுமொத்த ஆதிக்க சக்திகளின் கட்சிகள் தேசிய இனப்பிரச்சினையானது நாட்டின் பிரதான பிரச்சினையாக இருந்து வருவதை கவனத்தில் கொள்ளவில்லை. அதேவேளை மலையகத் தமிழ் மக்கள் உள்ளிட்ட தமிழ் தேசிய இனத்துக்கும், முஸ்லீம் மக்கள் ஈறாக ஏனைய சிறுபான்மையினங்களுக்கும் காணப்படும் பிரச்சினைகளை மேலெழுந்தவாரியான பிரச்சினைகள் போன்று பார்க்கும் தன்மையையே தற்போது ஆட்சிக்கு வந்துள்ள மைத்திரிபால சிறிசேனவிடமும், அவரைத் தாங்கி நிற்கும் கட்சிகளிடமும் காணப்படுகிறது. அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களும்

15 ஆம் பக்கம் பார்க்க...

வாழ்க்கை அலுத்துப் போவதாக கூறுவதை அடிக்கடி கேட்ட முடிகின்றது. தன்னைச் சுற்றிய அனைத்தையும் தொடர்ந்து எப்படி ரசிக்க முடியும் என்று கூறி, தன்னுடைய சொந்த வாழ்க்கையை மறுதலிக்கின்றதை நாம் காண முடிகின்றது. அடிக்கடி தன்னை சுற்றிய அனைத்தையும், தன் வாழ்க்கை முறையையும் புதிது புதிதாக மாற்றும் போக்கு, இன்றைய பண்பாடாகி வருகின்றது. இது எப்படி, ஏன் நிகழ்கின்றது. இது தனிமனிதர்களின் தெரிவா?

வர்க்கரீதியான தனிவுடமைச் சமூக அமைப்பின் வெளிப்படுதன்மை தான், வாழ்க்கை முறையாகும். இன்று இந்த முறைமையை பொருள் சார்ந்த நுகர்வாக, நவதாராளமயம் வக்கிரமடைய வைத்திருக்கின்றது. இந்த வகையில் சந்தை என்பது, சந்தையின் பொது நோக்குக்கே முரணானது. இதற்கு அமைவாக ஒவ்வொரு மனிதனும் இதன் பலியாடாக, மார்க் அடையாளத்தை சிலுவையாக்கி சுமப்பதே பெருமைக்குரியதாக்கி வருகின்றது. சந்தை மனிதனின் வாழ்க்கை பற்றிய உள்ளடக்கத்தை, மார்க்கை வெளிப்படுத்தலாக மாற்றி வருகின்றது.

இன்று மார்க் அடையாளத்தை சிலுவையாக்கி சுமப்பதே பெருமை என்னும் பண்பாடு, சந்தையின் ஆன்மாவாகி விடுகின்றது. குறிப்பிட்ட மார்க் அல்லாத பொருட்கள் இழிவானதாகவும், தரம் குறைந்ததாகவும் கருதும் பொதுப் புத்தி, அறிவாகி விடுகின்றது. இதனால் சந்தையில் பிரபல்ய மார்க் அல்லாத பொருட்கள் அருகி வருவதுடன், அதன் உற்பத்திகள் தன்மையையும், அதன் நீடித்த ஆயுளையும் இன்றைய சந்தைப் பண்பாடு மறுதலித்து விடுகின்றது. குடும்ப விவாகரத்து தொடர்பான புரிதல் மனிதவுரிமை அடிப்படையில் இருக்கும் அதேநேரம், இது ஏன் எதனால் தோன்றுகின்றது என்ற புரிதல் சந்தை உள்ளடக்கம் சார்ந்து இருப்பதில்லை. அடிக்கடி பொருளை மாற்றி நுகரக் கோரும் சந்தை உளவியல், இன்றைய விவகாரத்தில் முதன்மையான கூறாக இயங்குகின்றது. துணையை அடிக்கடி மாற்றக் கோரும் பாலியல் நுகர்வாகவே, குடும்பத்தைக் கூட சந்தைப் பொருளாக்கி விடுகின்றது.



மார்க்சியம் - 18

# பொருளை மாற்றும் பண்பாடு, வாழ்க்கைத் துணையை விட்டு வைக்குமா?

விளம்பரம் செய்யும் பொருளை நுகர்வோனையே, உயர்வானவனாக சமூகம் முன்கொண்டு வருகின்றது. இது இன்று தன்னை முன்னிறுத்திக் கொள்ள பொருளை நாடுவதும், அதை அடிக்கடி மாற்றுவதும் வாழ்க்கை முறையாகி வலுப்படுகின்றது.

மற்றவரை விட தன்னை உயர்வானதாக முன்னிறுத்திக் காட்டிக்கொள்ளும் முனைப்பானது, ஆடம்பரப் பொருட்களை முன்னிறுத்துவதாக மாற்றி வருகின்றது. இது தன் வாழ்க்கையைச் சுற்றிய அனைத்தையும் சுய விளம்பரம் செய்யவும், தன்னை விளம்பரம் செய்யக்கூடிய வியாபாரக் குறியை (வியாபார இலச்சனை - மார்க்) நாடுகின்றது. விளம்பரம் செய்வதே, தனிமனித நடத்தையாகி வருகின்றது.

இதை மிக நுட்பமாக அனுபவரீதியாக தெரிந்துகொள்ள வேண்டுமாயின், ஆணும் - பெண்ணும் தங்கள் உள்ளாடைகளைக் காட்டிக் கொள்ள முனையும் வண்ணம், உடை அணியும் முறை இதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

ஆண் - பெண் தங்கள் உள்ளாடையை எந்த மார்க்கைக் (Brand) கொண்டு அணிகின்றனர் என்பதைக் காட்டிக் கொள்ளும் வண்ணமே, மேலாடையை சந்தை மாற்றி வருகின்றது. இதன் மூலம் சந்தை உள்ளாடையைக் கூட, தனிமனிதன் சுய விளம்பர பண்பாடு மூலம் வியாபாரம் செய்கின்றது. தங்கள் உள்ளாடை தரமான மார்க்காக அணிவதைக் காட்டிக் கொள்வதே தற்பெருமைக்குரிய ஒன்றாகவும், அதை வெளிப்படையாக காட்டிக் கொள்வதே மனித பண்பாடுமாகி வருகின்றது. உள்ளாடையை அணியும் தேவைக்கு பதில், அதை காட்டிக் கொள்வதே முதன்மை பெற்று அதன் வெளிப்பாடு ஆடம்பரமாகி விடுகின்றது.

இன்று உள்ளாடையின் மார்க் வெளித்தெரியாத வெளியாடை குறைந்து விலை அதிகமாகி வருகின்றது.

மார்க் அடையாளத்தைக் கொண்டதே சந்தை, அதை நுகர்வதே உயர்ந்த பண்பாடு என்ற தற்குறித்தனம், மனிதனின் பொது இயல்பாகின்றது.

மார்க்கை முன்னிறுத்திய விளம்பர சந்தை ஊடாகவே உலகைத் தரிசிக்குமாறு, மனிதனின் வாழ்க்கை முறையையே தனிவுடமை மாற்றி விடுகின்றது. தன்னைச் சுற்றி என்ன நிகழ்கின்றது என்ற சுய அறிவைக் கூட இழந்து விடும் வண்ணம், அனைத்தையும் மார்க் பொருள் சார்ந்ததாக மாற்றி வருகின்றது.

அதேநேரம் தன்னை முதன்மைப்படுத்திக் காட்டிக் கொள்ள உதவும் பொருளை, எவ்வளவு வேகமாக புதிய பொருள் மூலம் மாற்றிக் கொள்ளுகின்றோமோ, அதுவே தங்களை பெருமைப்படுத்திக் காட்டிக் கொள்ளும் மற்றொரு தகுதியாக கருதும் பண்பாடு சமூகமயமாகி வருகின்றது.

இந்த உளவியலும், மனிதப் பண்பாடும், இணைந்த குடும்ப வாழ்வில் என்ன வகையான விளைவுகளை உருவாக்குகின்றது என்பதைப் பார்ப்போம். இருவர் இணைந்த குடும்பத்தில் உள்ளார்ந்த முரண்பாடுகளுக்கு அப்பால், ஆண் அல்லது பெண் தொடர்ந்து ஒருவருடன் இணைந்து வாழ்தலை, பொருள் நுகர்வு பற்றிய வாழ்க்கைக் கண்ணோட்டம் இயல்பாகவே மறுதலித்து விடுகின்றது.

அடிக்கடி பொருளை மாற்றி நுகரக் கோரும் சந்தை, ஒருவருடன் தொடர்ந்து இணைந்து வாழ்வதை மறுதலித்து விடுகின்றது. இன்றைய குடும்ப முரண்பாடுகளுக்கு பின்னால், பொருளை அடிக்கடி மாற்றும் நுகர்வு வாழ்க்கை முறை குடும்ப வாழ்விலும் திருப்தியற்ற உளவியல் சிதைவை உருவாக்குகின்றது.

கூடி - இணைந்து வாழும் சமூகத் பொதுப் புரிதலானது விவாகரத்தை இருக்கின்ற சமூக அமைப்பின் உள்ளான ஜனநாயக உரிமையாக புரிந்து கொள்வதானது, உண்மையில் சமூகக் காரணங்களுடன் தொடர்பானதாக இயங்குகின்றது. உள்ளாடையை வெளித் தெரிய அணிவதாகட்டும், விவகாரத்தாகட்டும் இவை எல்லாம் தனிமனித முடிவுகள் சார்ந்ததல்ல. சமூகம் சார்ந்த காரிய காரணங்களுடன் தொடர்பு பெற்றது.

இளைய தலைமுறை உள்ளாடை வெளித்தெரிய உடை அணிவதை, முந்தைய தலைமுறை எதிர்த்து தங்கள் குழந்தைகளுடன் முரண்படுவதைக் காண்கின்றோம். அல்லது அதை தனிமனித உரிமையாக அங்கீகரித்துச் செல்வதைக் காண்கின்றோம். இதை தனிப்பட்ட மனிதனின் தனிப்பட்ட செயலாகவும், தனிமனித உரிமையாகவும் அணுகுவதையே பொதுவில் காண்கின்றோம். இப்படி அணுகுவது சரியானதா! உண்மையில் இதை சந்தை தான் உருவாக்குகின்றது. மூலதனத்தை சதா பெருக்கிக் கொள்ளும் தனிவுடமை, மக்களின் சமூகப் பண்பாடுகளை அழித்து தனிவுடமை நுகர்வுப் பண்பாடுகளைப் புகுத்தி விடுகின்றது. இப்படி இருக்க அதை தனிநபரின் நடத்தையாகக் கொண்டு எதிர்வினையாற்றுவது சரியானதல்ல. இதைச் சந்தைப் பண்பாடாகப் புரிந்து கொள்வதில் இருந்து, சமூகத்தை நோக்கிய சமூக பண்பாட்டை முன்னிறுத்தி அணுகுவதன் மூலமே, இதன் சாரத்தை விளங்கிக் கொண்டு அணுக முடியும். அல்லாத அனைத்தும் மொட்டையாகவும், தனி மனித நடத்தை சார்ந்த எதிர்ப்பாகவும் அல்லது அங்கீகாரமாகவுமே மாறும்.

வெளிப்பாட்டையல்ல, விளைவையல்ல, மார்க்கையல்ல, விளம்பரத்தையல்ல ஒட்டுமொத்தமாக சமூகம் சார்ந்து அணுக வேண்டும். அதாவது இதன் பின்னுள்ள சந்தை, அதை உருவாக்கும் பெரும் மூலதனங்கள், மொத்தத்தில் நவதாராளமயத்தையும் அதற்கு அடிப்படையாக இருக்கும் தனிவுடமைக்குப் பதில், சமூகம் சார்ந்த பொதுவுடமை சார்ந்த பார்வையும் செயலும் அவசியமானது.

எம்மைச் சுற்றிய நிகழ்வுகள் அனைத்தும் சமூகம் சார்ந்தவையே ஒழிய, தனி மனிதன் சார்ந்ததல்ல. தனிமனிதன் சமூகத்தை புரிந்து செயற்படுவதில் இருந்தே, தனிமனித செயற்பாடுகள் மாறுபடுகின்றன. அனைத்தும் மாறிக் கொண்டு இருப்பதுடன், மாற்றத்துக்கு உட்பட்டது.

சமுதாய முரண்பாடுகள் தொடங்கி தனி மனித முரண்பாடுகள் வரை, சமூகம் சார்ந்து அதை அணுகாத போது, அக முரண்பாடுகள் கொண்ட முடிவுகளாக இருக்கும். உதாரணமாக உடையணியும் முறை, மார்க் பொருளை நாடும் கண்ணோட்டம், சமுதாய கண்ணோட்டமற்ற சுயநலம் .... இறுதியில் நட்புக்குள்ளும் நெருங்கிய உறவுக்குள்ளும் தர்க்கங்களையும், விவாதங்களையும், முரண்பாடுகளையும் தோற்றுவிப்பதைக் காண முடியும். நடத்தையின் அல்லது விளைவின் சாரத்தை தனிநபர் நடத்தையாக முன்னிறுத்தி அணுகும் போக்கு, முடிவில்லாத இரு துருவங்கள் கொண்ட முடிவுகளாகவும் விளைவுகளாகவும் மாறுகின்றது. இவை சமுதாயம் சார்ந்த முரண்பாடுகளாகவும், அதை தனிநபர்கள் பிரதிபலிக்கின்றனர். சமுதாயம் பற்றிய பொது உள்ளடக்கமே, தனிநபர் வாழ்க்கை முறை பற்றிய கேள்வியை, சமுதாய நலன் சார்ந்ததாக விளங்கிக் கொள்ளவும், அதன் மூலம் மாற்றி அமைக்கவும் முடியும்.

உதாரணமாக குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருளை வாங்கிக் கொடுத்த சில மணி நேரத்தில் பொருளைக் கைவிட்டு புதிய பொருளைக் கோருகின்றது. அப்பிள்

11 ஆம் பக்கம் பார்க்க...

ஜனாதிபதித் தேர்தல் முடிந்துவிட்டது. மைத்திரிபால சிறிசேன இலங்கையின் ஏழாவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்தத் தேர்தலில் இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களும் எப்படியான கொள்கைகளை முன்வைத்து தேர்தலில் இறங்கினார்கள்? இந்த தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அவர்கள் கையாண்ட உபாயங்கள் எவ்வாறு செயற்பட்டன என்பது குறித்து ஒரு சிறிய ஆய்வு மாத்திரமே இது. நாங்கள் மஹிந்த ராஜபக்ஷவிலிருந்து ஆரம்பிப்போம். இவருடைய தேர்தல் பிரச்சாரங்களை நோக்கும்போது அவை கொள்கை விளக்க பிரச்சாரங்களாக இருந்ததாகத் தெரியவில்லை. மைத்திரிபால சிறிசேனவை



# புதுமுகம் வந்தது! யுகம் பிறக்குமா?

## புதிய மொந்தையில் பழைய கள்!

விமர்சிப்பதற்கே முக்கியத்துவமளிக்கப்பட்டது. அந்த விமர்சனங்கள் கூட கொள்கை சம்பந்தமான விமர்சனங்களாக இருக்கவில்லை. மைத்திரிபால பலவீனமானவர், பொம்மை, ஆடைகளை தெரிவு செய்வதில் நரேந்திர மோடியையே மாதிரியாக எடுத்துக் கொண்டார் போன்றவையே பிரச்சாரத்தில் பயன்படுத்தப்பட்டன. அடுத்தது, மைத்திரி அமைச்சராக இருந்தபோது மஹிந்தவை உயர்வாக பேசிய சந்தர்ப்பங்கள் இந்த பிரச்சாரத்தின்போது பயன்படுத்தப்பட்டன. அவை பெரும்பாலும் தனிப்பட்ட அவதூறுகளாகவும், சேறு பூசும் நடவடிக்கைகளாகவுமே இருந்தன. மஹிந்த ராஜபக்ஷ தனது கொள்கைகள் குறித்து அதிகம் பேசவில்லை. தனது இரண்டு முக்கிய கொள்கைகள் குறித்து வெளிப்படையாகவே பேசினார்.

1. தந்திரோபாயமாக இனவாதத்தை பயன்படுத்தி தனது தேர்தல் பரப்புரையை முன்னெடுத்தார்.

2. அபிவிருத்தி என்ற பெயர்ப்பலகையின் கீழ் நவதாராளமய முதலாளித்துவத்தை தான் ஏற்றுக் கொள்வதாக நேரடியாகவே கூறினார்.

மஹிந்தவின் பிரச்சாரங்களின்போது அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் அவர் மேற்கொண்ட சீர்திருத்தங்களைக் காட்டவும், இனவாத ரீதியில் எதிர்க்கட்சியை தாக்கிப் பேசவுமே அதிக நேரத்தை எடுத்துக் கொண்டார். மைத்திரிபால புலிகளின் கைப்பொம்மை, ஏகாதிபத்தியத்தின் கைப்பாவை போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் அவரது பேச்சில் காணப்பட்டன. இதன் மூலம் மக்கள் மத்தியில் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்வதே அவரது நோக்கமாக இருந்தது. எவ்வாறாயினும், வடக்கில் தமிழ், முஸ்லிம் மக்களோடு கருத்தொற்றுமைக்கு வரவேண்டிய தேவை அவருக்கு எப்போதுமே இருந்ததில்லை. கிராமப்புற சிங்கள மக்கள் மத்தியில் தன்னை நிலைநிறுத்தி, அதன் பலத்தினால் வடக்கை அடக்கி வைத்துக் கொள்வதே அவரது தந்திரமாக இருந்தது. வடக்கு சம்பந்தமாக அவரிடமிருந்தது யுத்தரீதியான திட்டம். மலையகம் உள்ளிட்ட பெருந்தோட்டத் துறையை சார்ந்த தமிழ் மக்களுக்கு கடுகளவாவது எதையும் பெற்றுக் கொடுக்காது அவர்களது தலைவர்களுக்கு சலுகைகளைப் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக அவர்களின் வாக்குகளை கொள்ளையடிக்க முயன்றார். இம்முறை தேர்தலில் மஹிந்தருக்கு எதிராக அசுர வேகத்தில் செயற்பட்டவர்கள் மலையகத்தை சேர்ந்த தமிழ் மக்கள் மற்றும் வடக்கு கிழக்கு தமிழ்- முஸ்லிம் மக்களாகும். வடக்கு - கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும், நூரளை, பதுளை ஆகிய மாவட்டங்களிலும் மஹிந்த தோற்றது அதனால்தான். பேருவளை, காலி, மாவனல்லை, அக்குறனை போன்ற முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளிலும் மஹிந்த தோற்றார். ஆனால் கிராமப்புற சிங்கள மக்கள் மத்தியில் நம்பிக்கையை தக்க வைத்துக் கொண்டதை காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொணராகலை, குருநாகல் போன்ற மாவட்டங்களை பார்க்கும்போது தெரிகிறது. தவிரவும், நகர்ப்புற பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் தாம் வசித்த வீடுகளிலிருந்து விரட்டப்பட்டமையால் மஹிந்தவின் மீதிருந்த கோபத்தின் காரணமாக அவருக்கு எதிராக வாக்களித்துள்ளனர். இது மாத்திரமல்ல, ஜனநாயகம் சம்பந்தமான சுலோகத்தினால் கவரப்பட்ட நடுத்தர வர்க்க

> ***"'மஹிந்தவிற்கு மூன்று முறை முடியாது' என்ற சுலோகத்திலிருந்து 'மோசடியான குடும்ப ஆட்சிக்கு முடிவுகட்டுவோம்' என்ற கட்டம் வரை பிரச்சாரத்தை முன்னெடுத்த மக்கள் விடுதலை முன்னணி கொள்கை சம்பந்தமான பேச்சுக்களை மறைக்க ஒத்துழைத்தது. தவிரவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையையோ அல்லது அரசியலமைப்பையோ பற்றி பேசுவதற்கு எதுவுமே இல்லாததால் இறுதியாக இந்த நிலைமைக்கு ம.வி.மு தள்ளப்பட்டது"***

மக்களும் அவருக்கு எதிராகவே செயற்பட்டுள்ளனர். கொழும்பு நகர், மொரட்டுவை, இரத்மலானை, தெஹிவலை மற்றும் ஐதேக சார்பு கரையோரப் பிரதேசங்களும் நகர்புற பிரதேசங்களும் இதற்கான எடுத்துக்காட்டுகளாகும். ஜாதிக ஹெல உறுமய, மக்கள் விடுதலை முன்னணி, சரத் பொன்சேகா உட்பட அனைவரும் ஒன்றிணைந்த போதிலும் கிராமப்புற பிரதேசங்களில் இடைவெளியை குறைக்க முடிந்ததேயன்றி மஹிந்தவை தோற்கடிக்க அவர்களால் முடியவில்லை. பொலன்னறுவையில் பெரியளவில் வாக்குகள் கிடைத்திருக்கவில்லை. சந்திரிகாவால் அத்தனகலவை தக்கவைக்க முடியவில்லை. மஹிந்தவின் வாக்குவங்கி தெளிவாக இருப்பதை போன்றே மைத்திரியின் வாக்குவங்கியும் தெளிவாகவே உள்ளது. தமிழ் முஸ்லிம் மக்களின் பெரும்பாலான வாக்குகள் மைத்திரிக்கு கிடைத்துள்ளன. கரையோர பிரதேசங்களில் கத்தோலிக்க மக்கள் மத்தியிலும், நகர்புற வறிய மக்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தின் மத்தியிலும் மஹிந்தவிற்கு சார்பான நிலையொன்று இருந்தது. இவர்கள் மீது பாரியளவில் ஆதிக்கம் செலுத்த மைத்திரியால் முடியாது போனது. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் வேறு திட்டத்தின் பிரிவுகளாக ஆகியுள்ளனர். அவர்களை மைத்திரியால் நேரடியாக ஒழுங்குபடுத்த முடியாது. உதாரணமாக, திகாம்பரம் போன்றவர்களின் எழுச்சி பெருந்தோட்டத்துறை தொழிலாளர்கள் மீது தாக்கத்தை செலுத்தக் கூடும், அதேபோல், தமிழ்த்தேசிய கூட்டமைப்பினால் நாளைய நாளில் வெளியிடப்படும் சிறு அறிக்கையினால் கூட அந்த சிறுபான்மை வாக்குகளை மைத்திரிபால இழக்க நேரிடும். அதனை அவரால் ஒழுங்குபடுத்த முடியாது. அதேபோன்று, அதற்கான பொறிமுறையொன்றையும் அவரால் அமைத்துக் கொள்ள முடியாது. அந்த வாக்குகளுக்கும் கிராமிய மக்களுக்குமிடையில் உறவுகளை பேணும் திட்டத்தை செயற்படுத்துவதும் எளிதாக இருக்காது. ஆகவே, தேர்தல் முடிவுகளை பார்க்கும்போது ஒரு சிறு அசைவினால் கூட

11 ஆம் பக்கம் பார்க்க...



# ரத்துபஸ்வல துன்னான சுன்னாகம்

சுன்னாகம் என்றாலே நிவைக்கு வருவது அதன் சுத்தமான உவர்ப்பு இன்றிய சுவையான நன்னீராகும். இந்த நன்னீரை வரட்சிக்காலத்தில் குடிநீர் விநியோகத்துக்காக ஏனைய பிரதேசங்களுக்கு நீர்த்தாங்கி வாகனங்கள் சுன்னாகக் கிணறுகளிலிருந்து நிரப்பி எடுத்துச் செல்வது வழமை. அப்படியான நன்னீர் வளத்தைக் கொண்ட சுன்னாகம் மற்றும் அதனையண்டிய பிரதேசங்களானகிழக்கே கோப்பாய் வரையிலும் வடக்கே தெல்லிப்பளை பகுதி வரையிலானபெரும் நிலப்பரப்பின் நிலத்தடி நீர் படிப்படியாக நஞ்சாகி வருகிறது. கடந்த 13.12.2014ஆம் திகதி தெல்லிப்பளை கிழக்கு சிற்றியம்புளியடி பகுதியில் 15 கிணறுகளில் எண்ணை கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். தற்போது தங்கள் கிணறுகளில் சுரக்கும் நீரினை குடிக்கவோ குளிக்கவோ மற்றும் வேறு எந்தப் பாவனைக்கும் பயன்படுத்த முடியாது பாரியநீர் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கிறார்கள். விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்ட யாழ்ப்பாணத்தில் இயற்கையைப் பற்றி சூழலைப் பற்றி அங்குவாழும் வாழும் மனிதர்களைப் பற்றி எள்ளளவும் அக்கறை கொள்ளாமல் மின் உற்பத்தி எரிபொருள் கழிவுகளை அப்புறப்படுத்த பாதுகாப்பான வழிமுறைகள் பல இருக்கின்றபோதும் இலாபத்தை மட்டுமே குறிக்கோளாக் கொண்ட"நோதன் பவர்ஸ்" முதலீட்டாளர்களால் ஆகக்குறைந்த செலவில் மேற்கொள்ளப்படும் கழிவு எண்ணெய் அகற்றல் முறைமையே இதற்குக் காரணமாகும். இந்தக் கழிவு எண்ணெயானது நிலத்தடி நீரோட்டத்துடன் கலந்து அதன் ஊடாக சுண்ணாகம் கோப்பாய், தெல்லிப்பழை மற்றும் இவற்றையண்டிய பிரதேசமெங்கும் பரவி கிணறுகள் அனைத்தும் கழிவு எண்ணெய் கலந்த நச்சு நீராக மாறியதால் மாசடைந்து பாவனைக்கு உதவாததாகி விட்டது. இந்நீரினை பாவிக்கக் கூடாது என சுகாதார இலாகாவினால் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டு தடை



செய்யப்பட்டிருக்கின்றது. நன்னீர் வளம் கொண்டிருந்த சுன்னாகப் பிரதேச மக்களின் பாவனைக்கு வெளியிடங்களிலிருந்து நீர்த்தாங்கிகள் மூலம் நீர்வழங்கல் செய்யவேண்டிய பரிதாபத்துக்கு உரியதாக நிலைமை இன்று மாறிவிட்டது. "நீரின்றி அமையா யாக்கைகெல்லாம்" என பண்டைத் தமிழ் புறநானூறு, உயிர்களின் அனைத்தினதும் ஜீவாதாரம் நீர் என்று பாடி வைத்திருப்பதை நாம் அறிவோம். அந்த நீரேயின்றிய ஜீவாதாரப் பிரச்சனையால் மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு அல்லல்படுவார்கள் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. ஆனால் இந்த ஜீவாதாரப் பிரச்சனைக்கு உரிய வழியில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கழிவு எண்ணெய் கசிவுக்கு காரணமாக அனல் மின்னுற்பத்திக்கு பொறுப்பான தனியார் நிறுவனம் இதைப் பற்றி அலட்சியப்படுத்தியே நடந்து வருகிறது. மக்களின் குடிநீருக்குள் "விசத்தைக்" கலக்கும் பொறுப்புக்கு அவர்களே காரணமானவர்கள். இது தமிழ்மக்களுக்கு மட்டுமான தனியான பிரச்சனையாக மட்டும் காட்டுவது இதன் ஊற்றுவாயான நவதாராளமய அரசியல் பொருளாதார முறைமையினை (அந்நியப் பெருமூலதனங்களின் பொருளாதாரச் சுரண்டல்) காப்பாற்றும் நடவடிக்கையாகும். ஹம்பகா மாவட்டத்திலுள்ள வெலிவேரிய ரத்துபஸ்வல பிரதேசத்திலுள்ள இறப்பர் கையுறை தயாரிக்கும், ஹெலிஸ் பன்னாட்டு தொழில் நிறுவனத்தின் டி.பி.எல். என்ற தொழிற்சாலை ஒன்றில் இருந்து நச்சுக் கழிவு நிலத்தடி நீரில் கலந்ததினால் பாவனைக்குதவாத நச்சுநீராக மாறியது. இந்தக்குடிநீர்ப் பிரச்சனைக்காக பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையின் கீழ் இத் தொழிற்சாலையை அங்கிருந்து வெளியேற்ற வேண்டுமென கோரிப் போராடிய வெலிவேரிய மக்களுக்கு எதிராக நவதாராளமயப் பொருளாதாரத்தின் காவலனாக இருந்த இலங்கை அரசு துப்பாக்கிச் சூடு நடாத்தியது. தனது இராணுவத்தை மக்கள் மேல் ஏவி நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் போராடிய பொதுமகன் கொல்லப்பட்டதும் 20 பேர் வரையில் படுகாயத்துக்கு உள்ளானதும் வெலிவேரிய மக்களின் அனுபவமாகும். மக்களின் வளங்களை கொள்ளையடிக்கும் சுற்றுச்சூழல் அழிவது பற்றி அலட்டிக்கொள்ளாத உள்ளூர் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராகப் போராடும் மக்களை அரசு சிங்கள தமிழ் மக்கள் என்று பிரித்துப் பார்ப்பதில்லை. போராடும் மக்கள் மேல் அவர்கள் அடக்குமுறையை ஏவுகின்றபோது அரசு காப்பாற்றிக் கொள்ள விழைவது இந்த நவதாராளமய முதலீட்டாளர்களையே. முதலீட்டாளர்களின் பொருளாதார இலாபங்களுக்காக இராணுவ நடவடிக்கைகளை எடுக்க அரசு எவரென்றும் பாராது போராட்டத்தினை நசுக்கியே தீரும் என்பதற்கு வெலிவேரியப் படுகொலை சான்று. இதே போல் கொழும்பிலிருந்து 30 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள பாதுக, துன்னான பிரதேசத்திலுள்ள இதே தொழில் நிறுவனத்துக்குச் சொந்தமான ஹன்வெல இறப்பர் கையுறைத் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவினால் அப்பிரதேச குடிநீரும், புகைக்காற்றினால் காற்றும் நச்சாவதை எதிர்த்து, தொழிற்சாலையை அப்புறப்படுத்தும்படி கோரிக்கை வைத்துப் போராடிய மக்களிடமிருந்து அத் தொழிற்சாலை நிர்வாகத்தை பாதுகாக்கும் நடவடிக்கைக்கென்ற போர்வையில் பொலீஸ்படை அனுப்பி போராடியவர்களைக் கைது செய்து சிரமமின்றி இயங்குவதற்கு தொழில் நிறுவனத்துக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. எனவே மக்களுடைய குடிநீர்ப் பிரச்சனையாகவிருக்கட்டும் அல்லது எந்த வாழ்வாதாரப் பிரச்சனைகளாக இருக்கட்டும் எதுவாயிருந்த போதிலும் அங்கு இன மத வேறுபாடுகளின்றி அரசு தனது அடக்குமுறைகளைக் கையாண்டு நவதாராளவாத அரசியல் பொருளாதாரத்தினை பாதுகாக்கும். இப்பிரச்சனைகளை எதிர்கொள்ளும் மக்கள் தங்களுக்குள் கோடுபோட்டு,தங்களுக்குள் குறுக்கிப் போராடுவதை தவிர்த்து அடிப்படையான மக்கள் பிரச்சனைக்கு ஐக்கியப்பட்டுக் கைகோர்த்துப் போராடுவதும் ஐக்கியப்படுவதும் போராட்டங்களை பரஸ்பரம் பலப்படுத்துவதும் மக்கள் தங்களது பிரச்சனைகளுக்கான தீர்வினை அடைவதற்கான வழியாகும். இவ்வாறான போராட்டங்களுக்காக இன மத வேறுபாடுகள் தாண்டி மக்கள் இணைந்து கொள்ள வேண்டுமென நாம் அறைகூவல் விடுப்பதோடு இந்தப் போராட்டத்துடன் நாம் எமது கரங்களை இணைத்துக் கொள்கிறோம்.

# அ
# இல

இலங்கையில் அதன் 7வது ஜனாதிபதித் தேர்தல் பலவிதமான கருத்துக் கணிப்பீடுகளோடும் சாதக பாதக விவாதங்களுடனும் நீயா நானா என்ற போட்டிகளுடனும் ஜனநாயகமா சர்வாதிகாரமா என்ற தலைப்புகளோடும் நடைபெற்று முடிந்துள்ளது. ஜனநாயகத்தைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு திருவாளர் மைத்திரிபால சிறிசேனாவிடம் இலங்கைக் குடிமக்களால்(51.28 சதவீதம் வாக்குகளால்) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை 47.58 சதவீதமான குடிமக்கள். இந்த ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதனை தங்கள் வாக்குகள் ஊடாக வெளிப்படுத்தி உள்ளனர். இந்த தேர்தல் முடிகளின் ஊடாக நாட்டு மக்கள் சரிபாதியாக பிளவுபட்டிருப்பது மிகத்தெளிவாகத் தெரிகிறது. இப்படியாக மக்கள் பிளவுபட்டிருக்கும் ஒரு சூழலில் எப்படியான ஒரு சுபீட்சமான எதிர்காலத்தை நாட்டுக்கும் அதன் மக்களுக்கும் புதிய ஜனாதிபதியால் உருவாக்கமுடியும்? இதற்கான விடை "ஜனநாயகம்" பற்றிய புரிதலில் மட்டுமே தங்கியுள்ளது.

முடியாட்சி(மன்னர் ஆட்சி) முடிந்து குடியாட்சி முறை வளரத் தலைப்பட்டபோது அதனை முன்னெடுத்தவர்கள் மன்னர் ஆட்சியில் அதிகார மட்டங்களில் இருந்து மக்களை நசுக்கிச் சுரண்டி அவர்கள் உழைப்பால் சேர்ந்த செல்வங்களை எடுத்து மன்னருக்குக் கொடுத்து அதன் பயனாக மன்னரால் வழங்கப்பட்ட மானியத்தில் வசதியாக வாழ்ந்த நிலபிரபுக்களும் பணக்காரர்களுமே ஆவர். ஒரு காலகட்டத்தில் சாதாரண மக்கள், தொழிலாளர்கள், ஏழைகள், புத்திஜீவிகள் ஆகியோருடைய கிளர்ச்சிகளால் பாதிப்புக்குள்ளான அன்றைய ஆளும் வர்க்கம் தனது பொருளாதார நலன்களை கருத்தில் கொண்ட அதேவேளை, மக்களையும் திருப்திப்படுத்தும் வகையில் வரையப்பட்டதே "மக்களுக்காக-மக்களால்-மக்களைக் கொண்டு" நடாத்தப்படும் ஆட்சிமுறையான இந்த "ஜனநாயகம்" ஆகும். இந்த ஜனநாயகக் கோட்பாட்டை எழுதியவர்கள், படிப்பறிவுள்ள மக்களைக் கருத்தில் வைத்தே எழுதியுள்ளார்கள். படிப்பறிவில்லாத பாமர மக்களைக் கவனத்தில் எடுக்கவில்லை.

உதாரணத்திற்குப் பார்ப்போம். ஒரு படித்த மக்கள் கூட்டத்தில் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவேண்டி சாதக-பாதக விவாதம் நடைபெறுகிறதென வைத்துக்கொள்வோம்.

அக்கூட்டத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் அது புரிந்து எல்லோரும் அதற்கான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவேண்டும்.

வாக்கெடுப்பில் பெரும்பான்மை சிறுபான்மை அடிப்படையில் முடிவு எட்டப்படும். ஆனால் முடிவை எட்டும்போது சிறுபான்மையோரின் கருத்துக்களையும் உள்வாங்கி அவர்களைப் பாகுபடுத்தாமலும் பாதிப்புக்குள்ளாகாமலும் நடத்தவேண்டும். ஜனநாயகம் என்பதன் நடைமுறை அர்த்தம் (அதனை வரைந்தவர்களின் சிந்தனையில்) இதுதான்.

இதனை நியாயமான வழியில் மக்களுக்குரிய "ஜனநாயகமாக" பயன்படுத்தவேண்டுமானால் முதலில் மக்களுக்கு உண்மையான-சரியான-அர்த்தமுள்ள "ஜனநாயக" நடைமுறையைக் கற்பிக்கவேண்டும். அந்த வகையில் அவர்களை "அரசியல் விழிப்புணர்வு" உள்ளவர்களாக ஆக்கவேண்டும். அரசியல் புரிதல் ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ள பிறப்புரிமை என்பதைச் சிந்தனையில் பதியவைக்கவேண்டும். இதனைக் கல்வி முறையில் ஒரு கட்டாய பாடமாக ஆக்கவேண்டும். இவை அரசியல் யாப்பில் ஒரு விதியாகப் வரையப்படல் வேண்டும். நாட்டு மக்கள் பரந்துபட்ட அளவில் அரசியல் விழிப்புணர்வு கொண்டவர்களாக இயங்கும் போதுதான் யதார்த்தபூர்வமான அதாவது "மக்களுக்காக-மக்களால்-மக்களைக் கொண்டு" செயற்படும் ஒரு நீதி நியாயம் கொண்ட "ஜனநாயக(ம்)" ஆட்சிமுறை அமையும்.

இது உலகில் நாட்டுக்கு நாடு பல தரப்பட்ட வடிவங்களில் நடைமுறையில் இருந்து வருகிறது. இலங்கையில் மக்கள் வாக்களிக்கும் தேர்தல்முறை அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல் இன்றுவரை ஜனநாயகம் என்ற பேரில் உருவாக்கப்பட்ட சட்டங்கள் முதல் அபிவிருத்தித் திட்டங்கள் வரை யாவுமே மக்களுக்கும் நாட்டுக்கும் தீமையைத்தான் ஏற்படுத்தி வந்துள்ளது.

(1) அரசு(அரச கட்டமைப்பு)

இன்றைய இலங்கையின் அரசியல் நிர்ணய சட்டம் இந்நாட்டில் வாழும் பல்லின மக்களின் கருத்துக்களையோ அல்லது அவர்களின் அடிப்படை உரிமைகளைக் கணக்கில் எடுத்தோ அல்லது பாமர-பாட்டாளி மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் வகையிலோ வரையப்பட்டதல்ல. இந்நாட்டில் வாழும் சிங்கள-பௌத்த பெரும்பான்மை இன மக்களைச் சாட்டாக வைத்து சிங்கள மேலாதிக்கவாதிகளின் வர்க்க நலன்களை மட்டும் கருத்தில் கொண்டே எழுதப்பட்டுள்ளது. இந்த அரசியல் நிர்ணய சட்டத்தின் கீழ் ஆட்சி அதிகாரத்திற்கு வரும் எந்த அரசாங்கத்தாலும் நாட்டின் இன்றைய நெருக்கடிகளை அதன் பாரிய பிரச்சனைகளை தீர்க்கமுடியாது. குடிமக்களின் வாழ்வை மேம்படுத்தமுடியாது. அவர்களின் வருங்கால சந்ததியினருக்கு ஒரு சுபீட்சமான வாழ்வுக்கான அடிப்படையை உருவாக்கவும் முடியாது. இலங்கையில் கல்விமுறை சிறுவயது முதல் மக்களை பிரித்தாளுவதற்கும் அதனூடாக உலக மூலதன பெரும் கோடீஸ்வரர்களுக்கு கைகட்டி தலை வணங்கி நின்று சேவகம் செய்யவும் ஏற்றவகையிலேயே அமுலில் இருந்து வருகிறது. உதாரணம்: இலவசக் கல்வியில் பட்டம். பின்னர் வெளிநாட்டில் உத்தியோகம். மக்களை மந்தைகளாக அடிமைகளாக மாற்றும் கல்வியே ஊட்டப்படுகிறது. இதனால் காலங்காலமாக ஆட்சி மாறி, ஆட்சி மாறி அரச பீடத்தில் அமரும் கொள்ளைக் கூட்டத்தினரால் நாட்டு மக்கள் அனைவரும் ஏமாற்றப்படுகிறார்கள். வஞ்சிக்கப்படுகிறார்கள். தவறான பாதைகளில் திசைதிருப்பப்படுகிறார்கள். தீய நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். குறிப்பாக 1948 முதல் உருவான சுதந்திர இலங்கை அரசும், அதன் கீழ் ஆட்சி செய்த அரசாங்கங்களும் பாமர சாதாரண பாட்டாளி மக்களை வேறுபாடின்றி ஒவ்வொரு காலகட்டத்திலும் வேறு வேறு காரணங்களைக் கூறி அடக்கி ஒடுக்கி கொன்று குவித்தே வந்துள்ளதை கடந்த கால வரலாறு காட்டி நிற்கிறது. மேலாதிக்க மனோபாவம் கொண்ட சுயநல சுரண்டல் கூட்டம் சாதி-சமய-பிராந்திய-இன-பால்-வர்க்க ரீதியில் மக்களை அணிதிரட்டிக் கட்சிகளை கட்டி வைத்துக்கொண்டு பகிரங்கமாக ஆவேசம் கொண்ட மேடைப் பேச்சுக்களால் மக்களை உருவேற்றி அவர்களைத் தங்களிடையே மோத வைப்பதும் திரைமறைவில் கூட்டாக சேர்ந்து நாட்டின் வளங்களை கொள்ளையடிப்பதும் தொடர்கதையாகி விட்டது.





**புதிய ஜனாதிபதி**

இந்த வரலாற்றுத் தொடர்கதையின் இன்னொரு அத்தியாயத்தின் ஆரம்பமே இன்றைய புதிய ஜனாதிபதியின் தெரிவாகும். இவரை தெரிவு செய்த குடிமக்களின் நிலை "எண்ணெய்ச் சட்டியில் இருந்து தப்பி நெருப்புக்குள் பாய்ந்த" மீனின் கதைதான். நாட்டில் குடிமக்களுக்குப் பயன்தரும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு அதிகாரமும் புதிய "ஜனாதிபதி" கையில் இல்லை. காரணம் "புதிய மொந்தையில் பழைய கள்" கதைதான். பழைய அரசியல் யாப்பு - அது உருவாக்கி வைத்துள்ள அரச கட்டமைப்பு இரண்டும் நாட்டில் நடைமுறையில் இருக்கும்வரை புதிய வெற்றி வீரனாக தேர்தலின் பின் காட்சியளிக்கும் திருவாளர் மைத்திரி சிறிசேனாவால் அரசாங்கத்தின் "தோற்றத்தை" மாற்றமுடியுமே தவிர அதன் "உள்ளடக்கத்தை" மாற்றமுடியாது.

அரசியல் யாப்பை மாற்றுவதற்கு பாராளுமன்றமும் அதன் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளும் வேண்டும். பாராளுமன்றப் பிரதிநிதிகள் யார்? எதனால்? எப்படி தெரிவுசெய்யப்பட்டார்கள்? மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான தகைமைப் பண்பும், நாட்டுக்கும் குடிமக்களுக்கும் நலன் தரும் சட்டதிட்டங்களை அலசி ஆராய்ந்து முடிவெடுக்கும் அறிவாற்றலும் இவர்களுக்கு உண்டா? நீதி நியாயங்களை மதித்து நடக்கும் மனிதப் பண்பு இவர்களிடம் உள்ளதா? இவர்கள் ஒவ்வொரு தேர்தலிலும் மக்களிடம் கையேந்தி வாக்குப் பிச்சை கேட்பவர்கள். பாராளுமன்றம் சென்றதும் வாக்களித்த மக்களை ஏறி மிதிப்பவர்கள். தங்கள் தங்கள் சுயநலத்திற்காக கட்சி மாறுபவர்கள் - கொள்ளையடிப்பவர்கள் - கொலை செய்பவர்கள் - வன்புணர்ச்சியாளர்கள் - கடத்தல்காரர்கள் - இப்படியானவர்கள்தான் இன்று மக்களின் பிரதிநிதிகள். இவர்களால் வரக்கூடிய மாற்றம் யாது? எப்படிப்பட்டது?


உலக வங்கி - சர்வதேச நாணய நிதியம் - ஆகியவற்றின் கடனுதவிகள், கட்டுப்பாடுகள், பணக்கார நாடுகளின் உள்ளீட்டு முதலீடுகள், அவற்றுக்கூடான உட்தலையீடுகள், உலகமயமாக்கல், பொருளாதார நடைமுறையின் அழுத்தங்கள், பிராந்திய நாடுகளின் அச்சுறுத்தல்கள் போன்றவற்றுக்கு ஏற்றவகையில் பொம்மலாட்டம் ஆடுவதே இன்றைய இலங்கை அரசாங்கத்தின் நிலைமையாகும். தங்கள் சுகபோகத்திற்காக நாட்டையும் மக்களையும் விலைபேசி விற்கும் பச்சை சுயநல அரசியல்வாதிகளையே இலங்கைக் குடிமக்கள் தங்கள் தலைவர்களாகவும், பிரதிநிதிகளாகவும் இன்றுவரை ஆட்சிபீடத்தில் மாறி மாறி அமர்த்திவருகின்றனர்.

**ஜனாதிபதியின் 100 நாட்கள் அவகாசம்**

இந்த 100 நாட்கள் எல்லை என்பது அடுத்த பொதுத் தேர்தலை ஒட்டியதாகும். அதுவரை ஜனாதிபதியின் நகர்வுகள் யாவுமே தேர்தலில் வெற்றி பெறுவதற்கான தந்திரோபாயம் கொண்டதாகவே அமையும். குடிமக்களின் நலம் கொண்டதாக இருக்கமுடியாது. எவராவது "மாற்றம்" வரும் என்று கூறுவார்களேயானால் ஒன்றில் அவர்கள் கூலிக்கு மாரடிப்பவர்கள் அல்லது அரசியல் குருடர்கள் ஆகும். இந்த வரலாற்றுப் போக்கு மாறாத வரை மாற்றப்படாத வரை இலங்கையின் குடிமக்களுக்கு விமோசனமே கிடைக்காது.

# புதிய ஜனாதிபதி
# ரசுக் கட்டமைப்பு
# ங்கைக் குடிமக்கள்







**இலங்கை குடிமக்கள்**

இலங்கையில் சிங்கள - முஸ்லீம் - தமிழ் மக்கள் அன்றும் இன்றும் இணைந்தே வாழ்ந்து வருகிறார்கள். அவர்களைப் பிளவுபடுத்துவது சிங்களவர் - இஸ்லாமியர் - தமிழர் என்ற அரசியற் கதையாடல்களே. பெரும்பான்மை சிறுபான்மை என்ற ஜனநாயக அரசியல் சதுரங்க விளையாட்டில் இலங்கைக் குடிமக்களாகிய சிங்கள-தமிழ்-முஸ்லீம் ஆகிய மூவின மக்களும் அவர்களால் தெரிவுசெய்யப்படும் தலைவர்களாலும் பிரதிநிதிகளாலும் இன்றுவரை மந்தைகளாகவே மதிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்த சிங்களவர்-தமிழர்-இஸ்லாமியர் என்ற சொற்களை பாவிக்கும் ஒவ்வொரு கணமும் இனவாதப் போதை மக்களுக்கு அவர்களை அறியாமலேயே ஊட்டப்படுகிறது. இலங்கையில் எந்தவொரு இனக்கலவரமும் எழுந்தமானதாக சாதாரண மக்களால் ஏற்படுத்தப்பட்டதல்ல. மாறாக யாவும் அரசியல்ரீதியாக திட்டமிட்டு குறிக்கப்பட்ட ஒரு குழுவினரால் நடாத்தி முடிக்கப்பட்டவையாகும்.

சாதாரண சிங்கள மக்களால் கலவரங்கள் நடாத்தப்பட்டிருந்தால்

(1)ஒவ்வொரு கலவரத்தின் பின்பும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மீண்டும் தங்கள் வாழ்விடங்களுக்கு திரும்பிச் சென்றிருக்கமுடியாது.

(2)"தமிழர்களின்" தனிநாட்டுக்கான 26 வருட கால யுத்தத்தின் போது தமிழ் மக்கள் எவருமே கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக வெளிநாடுகள் வந்திருக்கவும் முடியாது.

அதேவேளை இந்தக் கலவரங்களை வைத்து தமிழ் சிங்கள முஸ்லீம் முதலாளி வர்க்கம் தொடர்ந்து இன்றுவரை தங்கள் சுயநல வியாபாரத்தை வெற்றிகரமாக நடாத்திவருகிறார்கள்.

1971 இலும் 1989 இலும் சிங்கள மக்களுக்கான வர்க்க விடுதலை எனக்கூறித் தென்னிலங்கையில் இளைஞர்கள் ஆயுதப்போரை நடாத்தினார்கள். பல்லாயிரக் கணக்கில் மக்கள் கொல்லப்பட்டார்கள். 1983 முதல் 2009 வரை தமிழர்களுக்குத் தனிநாடு எனக் கூறி வட-கிழக்கில் இளைஞர்கள் ஆயுதப் போரை நடாத்தினார்கள். பல்லாயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டார்கள். இன்று தெற்கில் ஆயுதம் எடுத்தவர்களும் வட-கிழக்கில் ஆயுதம் தூக்கியவர்களும் அவர்களுடைய போராட்டத்தை நசுக்கி அவர்களது போராளிகளையும் மக்களையும் கொன்றொழித்த ஆட்சியாளர்களுடன் கைகோர்த்து நிற்கிறார்கள். பலிக்கடாவாக்கப்பட்ட மக்களை வைத்துப் பேரம்பேசுகிறார்கள்.

தென் இலங்கையில் பாமர பாட்டாளி மக்களை அடிப்படையாகக் கொண்ட இடதுசாரி சிந்தனை கொண்ட இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் சிங்கள முதலாளித்துவ தரப்பினரால் அழிக்கப்பட்டது.

வட-கிழக்கில் இடதுசாரி சிந்தனையுடன் கருக்கொண்டு முளைவிடத்தொடங்கிய இலங்கையின் தமிழ்ப் பேசும் மக்களின்(சமத்துவ சமதர்ம சமுதாய) விடுதலைப் போராட்டத்தை முளையிலேயே கிள்ளி எறிந்து அதனை திசைதிருப்பி தமிழீழத்திற்கான போராக்கிய தமிழ் முதலாளித்துவ தரப்பினர் அதனை முள்ளிவாய்க்காலில் வெட்டிப் விழுத்தி போட்டு புதைத்து மூடினர். 1977ல் "தமிழீழத்திற்கான" மக்கள் ஆணை பெற்றவர்கள் பின்பு 1981ல் மாவட்டசபை கண்டு மயங்கினார்கள். 2009 மே 18 வரை தனிநாட்டுக்கான யுத்தத்தில் குளிர் காய்ந்தவர்கள் இன்று மாகாணசபை ஆட்சியில் அட்டகாசம் பண்ணுகிறார்கள்.

கொல்லப்பட்டவர்கள் - காயப்பட்டவர்கள் - அங்கவீனமானவர்கள் - காணாமல் போனவர்கள் - கடத்தப்பட்டவர்கள் - விதவைகள் - பெற்றோரை இழந்த குழந்தைகள் - பாதுகாப்பற்ற பெண்கள் - இடம் பெயர்ந்தவர்கள் - கைது செய்யப்பட்டோர் - சிறையில் வதைபடுவோர்......இப்படி இன்னும் எத்தனையோ வகைப்பட்டோர் என நாட்டில் சாதாரண மக்கள் இன்று அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழர் தரப்பினர் ஆண்ட பரம்பரையினர் கனவில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

1949ல் மலையக மக்கள் நாடற்றவராக்கப் பட்டபோது இலங்கைத் தமிழர்கள் கவலைப்படவில்லை. 1971 இலும் 1989 இலும் தென்னிலங்கையில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகள்-மனித உரிமை மீறல்கள் பற்றி தமிழர் தரப்பினர் அக்கறைப்படவில்லை.

2006ல் கிழக்கில் நடைபெற்ற யுத்தக்குற்றங்கள் இவர்கள் கண்ணில் படவேயில்லை.

ஆனால், 2009 வன்னிப் பேரழிவை மூலதனமாக்கி தங்கள் வாழ்வை வளம் கொழிக்கச் செய்கிற முழு முயற்சிகளில் தமிழர் தரப்பு யாழ் மேலாதிக்கவாதிகள் இன்று ஈடுபட்டுள்ளனர்.

மாகாணசபைத் தேர்தலில் மக்கள் தங்கள் ஆத்ம சுவாலையைக் காட்ட அமோக பங்களிப்புடன் போட்ட வாக்குகளை தங்களுக்கு ஆதரவானதெனக் காட்டி வியாபாரம் செய்கின்றனர் இன்றைய தமிழர் தரப்பினர். (புலம் பெயர் மேலாதிக்கத் தமிழரின் தூண்டுதலில் தேர்தலைப் பகிஷ்கரிக்கும் எண்ணத்துடன் இருந்தவர்கள்)

ஜனாதிபதித் தேர்தலில் வட-கிழக்கில் மக்கள் ராஜபக்சவிற்கு எதிராக அளித்த வாக்குகளை தங்களுக்கு ஆதரவானதெனக் காட்டி புதிய ஆட்சியாளர்களுடன் இன்று பேரம் பேசத் தொடங்கியுள்ளனர் இந்த தமிழர் பிரதிநிதிகள்.

அடுத்து வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் மைத்திரியும் அவரது கூட்டாளிகளும் தமிழருக்கான தீர்வு பற்றி அடக்கியே வாசிக்க வேண்டிய சூழலையே கடந்த ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கின்றன. 1987 முதல் 2009 வரை "ஒன்றுக்கும் உதவாது" என ஓரங்கட்டிய "13 வது" என்னும் மக்களுக்குப் புரியாத-புரிய வைக்க முடியாத தாரக மந்திரத்தை, பட்டை நாமம் நெற்றியில் பூசியபடி மீண்டும் மக்கள் முன் உச்சாடனம் பண்ணிக் கொண்டு வரப் போகிறார்கள். மறுபடி மக்களின் எதிர்ப்பு வாக்குகள் தமிழர் தரப்புக்கு வெற்றிவாகையைச் சூட்டிக் கொடுக்கும் ஆபத்து வரப்போகிறது. ஏன் இந்த நிலை தமிழ்ப் பேசும் மக்களுக்கு? அறியாமையா? வரட்டுக் கௌரவமா? வணங்காமுடிச் சிந்தனையா? சுயநலமா? அல்லது மாற்றுவழி இல்லாத வெற்றிடமா? சிந்தியுங்கள். இனியாவது சிந்திக்கக் கற்றுக் கொள்ளுங்கள். "அவர் சொன்னார் இவர் சொன்னார் எனத் தடுமாற்றம் அடையவேண்டாம். எவர் சொன்ன சொல்லானாலும் அதை உந்தன் பகுத்தறிவால் எண்ணிப் பார்.

**அன்பான மக்களே !**

66 வருடங்களாக ஏமாற்றப்பட்டு இன்று யாவும் இழந்து நடுத்தெருவில் நின்றது போதும். உங்களிடம் இன்று எஞ்சி இருப்பது உங்கள் "அறிவாயுதம்" மட்டுமே. அதனைக் கையில் எடுங்கள்.

சிங்கள பௌத்த இனவெறி அரசு தமிழர்களை அழிக்கிறது. உண்மை. அதேபோல் தமிழ் மேலாதிக்க வெறி பிடித்தவர்களால் அழிக்கப்பட்ட தமிழர்களுக்காக நீதி-நியாயத்தை யாரிடம் நாங்கள் கேட்கமுடியும்?

தெற்கில் சிங்களவன் தமிழனைக் கொன்றால் அது இனக் கலவரம். வட-கிழக்கில் தமிழன் தமிழனைக் கொன்றதற்கு என்ன பெயர்?

இனியாவது விழித்தெழுங்கள்! எங்கள் மத்தியில் இருப்பது இனப் பிரச்சனை மட்டுமல்ல.

உங்களுக்கு அது நன்கு புரியும். அதனால்தான் தமிழர் தரப்பினர் ஒற்றுமைப்படமுடியவில்லை. மக்களை வைத்து பிழைக்கிறார்களே தவிர மக்கள் நலன் கருதி உழைக்கவில்லை.

நீங்கள் உங்களுக்கான அரசியலை கையில் எடுக்காத வரை "தீர்வு" வராது. 66 வருடங்கள் மற்றவரை நம்பியது போதும். இனியாவது உங்களை நீங்கள் நம்புங்கள்.

உங்களுடைய பிரச்சனை பற்றி உங்களுக்கு அக்கறை இல்லாத போது அடுத்தவர்கள் அதில்

# ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் தை 8 2015

| | இடதுசாரி முன்னணி | ஐக்கிய சோசலிச கட்சி | நவ சம சமாஜக் கட்சி | சோசலிச சமத்துவ கட்சி |
|---|---|---|---|---|
| அம்பாறை | 104 | 46 | 28 | 19 |
| கல்முனை | 26 | 31 | 12 | 11 |
| அம்பாறை தபால் வாக்குகள் | 6 | 7 | 4 | 1 |
| பொத்துவில் | 63 | 65 | 29 | 24 |
| சம்மாந்துறை | 35 | 48 | 19 | 14 |
| மொத்தம் | 234 | 197 | 92 | 69 |
| | | | | |
| மட்டக்களப்பு | 156 | 116 | 104 | 87 |
| கல்குடா | 63 | 59 | 55 | 38 |
| பட்டிருப்பு | 83 | 81 | 71 | 55 |
| மட்டக்களப்பு தபால் வாக்குகள் | 4 | 2 | 8 | 0 |
| மொத்தம் | 306 | 248 | 238 | 180 |
| | | | | |
| மூதூர் | 71 | 70 | 31 | 36 |
| திருகோணமலை தபால் வாக்குகள் | 21 | 3 | 6 | 0 |
| சேருவில | 158 | 44 | 14 | 18 |
| திருகோணமலை | 60 | 97 | 38 | 34 |
| மொத்தம் | 310 | 214 | 89 | 88 |
| | | | | |
| மன்னார் | 44 | 100 | 46 | 57 |
| முல்லைத்தீவு | 68 | 67 | 69 | 78 |
| வன்னி தபால் வாக்குகள் | 5 | 5 | 12 | 3 |
| வவுனியா | 74 | 128 | 91 | 75 |
| மொத்தம் | 191 | 300 | 218 | 213 |
| | | | | |
| சாவகச்சேரி | 69 | 96 | 56 | 51 |
| யாழ்ப்பாணம் | 31 | 66 | 27 | 24 |
| காங்கேசன்துறை | 51 | 105 | 38 | 40 |
| ஊர்காவற்றுறை | 26 | 34 | 22 | 63 |
| கிளிநொச்சி | 66 | 115 | 77 | 92 |
| கோப்பாய் | 89 | 118 | 73 | 77 |
| மானிப்பாய் | 69 | 128 | 69 | 60 |
| நல்லூர் | 40 | 79 | 50 | 35 |
| பருத்தித்துறை | 38 | 47 | 41 | 18 |
| யாழ்ப்பாணம். தபால் வாக்குகள் | 10 | 15 | 73 | 12 |
| உடுப்பிட்டி | 43 | 50 | 47 | 53 |
| வட்டுக்கோட்டை | 78 | 122 | 50 | 90 |
| மொத்தம் | 610 | 975 | 623 | 615 |
| | | | | |
| மட்டக்களப்பு | 306 | 258 | 238 | 180 |
| அம்பாறை | 234 | 197 | 92 | 69 |
| திருகோணமலை | 310 | 214 | 89 | 88 |
| வன்னி | 191 | 300 | 218 | 213 |
| யாழ்ப்பாணம் | 610 | 975 | 623 | 615 |
| மொத்தம் | 1651 | 1944 | 1260 | 1165 |

இனவாதம் மூலம் 66 ஆண்டுகள் மக்களை பிரித்து ஆண்டவர்களையும், அதை எதிர்த்து நின்ற இனவாதிகளில் இருந்து, இந்தத் தேர்தல் மூலம் புதிய தலைமுறையை அரசியல் மயப்படுத்தியதில் இடதுசாரி முன்னணி வெற்றிக்கான ஆரம்ப காலடியை எடுத்து வைத்திருக்கின்றது.

இடதுசாரி முன்னணிக்கு வாக்களித்த இந்த மக்கள் தான், இலங்கை மக்களை நேசிக்கின்ற உண்மையான சக்திகளாக தங்களை முன்னிறுத்தி இருக்கின்றனர். நாளைய வரலாற்றை தங்கள் கையில் எடுப்பதன் மூலம், நடைமுறையில் பயணிக்கும் பாதையை தேர்தல் மூலமும் முன்வைக்கும் வண்ணம் வாக்களித்து இருக்கின்றனர்.

இலங்கையில் சிங்கள - தமிழ் - முஸ்லிம் இனவாதத்தில் இருந்தும், வர்க்க அரசியலற்ற “இடதுசாரிய” போலிப்போக்கில் இருந்தும் விடுபட்ட ஒரு புரட்சிகர சக்திகளின் தோற்றமானது, ஒரு இரு வருடங்களையே தனது வரலாறாகக் கொண்டது. இலங்கையில் அனைத்து இனவாதத்துக்கும் எதிராகவும், வர்க்கப் போராட்டத்தை நடைமுறையில் முன்னெடுக்கும் கட்சி அரசியல் தோற்றத்துடன், இந்த தேர்தலையும் எதிர்கொண்டதானது வரலாற்றுக்கு முன் புதிரும் சவால் மிக்கதும் என்பது மிகையாகாது. இதன் போது சிங்கள - தமிழ் - முஸ்லிம் பாகுபாடின்றி ஒரே அணியில் நின்றது அதைவிடச் சிறப்பாகும்.

இடது முன்னணிக்கு எதிரான அவதூறுகள், இட்டுக்கட்டல்கள் ஒருபுறம் மறுபக்கம் தன் துண்டுப்பிரசுரத்தைக் கூட வெளியிட பணம் இல்லாத அமைப்பாக பாட்டாளி வர்க்கம் இந்த தேர்தலை பல்வேறு சவாலுக்கு இடையில் எதிர்கொண்டு தன் அணியை உறுதி செய்து கொண்டது.

இடதுசாரி முன்னணிக்கு கிடைத்த வாக்குகள் மற்றையவர்களுக்கு கிடைத்ததில் இருந்து வேறுபட்டது. அதாவது வர்க்க அடிப்படையில் கிடைத்த வாக்குகள். தாங்கள் ஏன் எதற்கு வாக்களிக்கின்றோம் என்ற குறைந்தபட்ச அரசியல் தெளிவுடன் வாக்களித்தவர்களே. தங்கள் வர்க்கத்தை நேசிக்கின்ற, அவர்களின் விடுதலை குறித்த அக்கறையுடன் பயணிக்கின்ற ஒரு அரசியல் தெரிவாகும்.

வர்க்க அடிப்படையிலான இந்தத் தோதலில், எமது வெற்றி தான் இந்த தேர்தலில் உண்மையான வெற்றியுமாகும். பாட்டாளி வர்க்கம் தன்னை வர்க்கமாக இந்தத் தேர்தலில் ஒருங்கிணைத்துக் கொண்டதே இந்த தேர்தலில் குறிப்பிடத்தக்க அரசியல் வெற்றியாகும்.

# இடதுசாரி முன்னணி வெற்றி குறித்து

**எமது நோக்கம் வாக்கு கேட்பதல்ல. எத்தனை வாக்குகள் பெறுகின்றோம் என்பதல்ல. இடதுசாரியத்தை மக்களிடம் கொண்டு செல்வதும் அதனை மக்கள் மயப்படுத்துதலுமே.**



### 1 ஆம் பக்க தொடர்ச்சி

ஆசிரியர்களுக்கான இராணுவப் பயிற்சி போன்ற இராணுவமயமாக்கல் நடவடிக்கைகளை நிறுத்துதல் போன்றவை அத்தியாவசியமானவையாக முன்னிற்கின்றன. அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், காணாமல் போனோர் தொடர்பான நீதி விசாரணைகள், அரசியற்படுகொலைகள் போன்றவற்றுக்கான நீதி விசாரணை, அடக்குமுறைகள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியவர்களுக்கான ஆதரவு தரும் ஒரு போராட்டங்களில் எம்மை ஈடுபடுத்திக் கொள்ள கட்சி திட்டமிட்டுள்ளது. தொழிலாளர்களின் உடனடிப் பிரச்சனைகள், விவசாயிகளது பிரச்சனைகள், மாணவர்களது பிரச்சனைகள், பேரினவாதத்துக்கு எதிரான போராட்டமாக இந்தப் போராட்டத்தினை விரிவுபடுத்துவதற்கு கட்சி தயாராகி வருகிறது. ஜனாதிபதி தேர்தல் வேளையில் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாது பின்வாங்குகின்ற அரசாங்கத்தின் போக்குகளுக்கு எதிராக, பெருத்த எதிர்பார்ப்புடன் வாக்களித்த மக்களின் அபிலாஷை களை வென்றுகொள்ளவும் மற்றைய அவசரமான கோரிக்கைகளுக்காகவும் கட்சி போராட்டமொன்றினை நடாத்த தயாராகிறது.

### 1 ஆம் பக்க தொடர்ச்சி

ஜனாதிபதி அன்று சுகாதார அமைச்சராக இருந்த போது நவலிபரல்வாத பொருளாதார கொள்கைக்கு ஏற்ப கொள்ளை இலாபம் ஈட்டிக்கொடுக்கும் வகையிலேயே மருந்துக் கொள்கை தயாரிக்கப்பட்டிருந்தது. மருந்துக் கம்பனிகளுக்கு சந்தையை அகலத் திறந்துவிடுவதன் மூலம் இலாபச் சுரண்டலை அதிகரிக்கும் எண்ணத்திலேயே இந்தக் கொள்கை வகுக்கப்பட்டது. எதிர்வரும் பெப்ருவரி மாதத்தில் அறிமுகப்படுத்தப்படும் என உறுதியளிக்கப்பட்ட மருந்துக் கொள்கையும் கூட இந்த அடிப்படையிலேயே இருப்பதற்கான சாத்தியமே உள்ளது. இந்த நிலமைகளைக் கருத்திற்கொண்டே சுகாதார சேவை உத்தியோகத்தர்களும் மாணவர்களும் ஒன்றிணைந்து நோயாளிகளின் உரிமைகளுக்காக போராடவேண்டும் என தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது. இதன் முதற்கட்டமாக எவ்வாறு தேசிய மருந்துக் கொள்கை வரைபு உருவாக்கப்பட வேண்டும் என்பதற்கான கலந்துரையாடல் ஆரம்பமாகஇருக்கின்றது. இதுவிடயத்தில் ஆர்வம் கொண்டுள்ள பிரிவினர்களுடன் முதலில் இக் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்படும். அதன் பின்னர் பொதுஜன அபிப்பிராயத்துக்கான கலந்துரையாடலாக இது விரிவுபடுத்தப்படும்.

### 5 ஆம் பக்க தொடர்ச்சி

ஐ போனின் புதிய வரவுடன், பழைய போனை கைவிட்டு புதியதை வாங்குகின்றனர் அல்லது அதை வாங்க மனம் துடிக்கின்றது. ஒரு திருமணத்திற்கு பயன்படுத்திய சாறியை, மற்றொரு திருமணத்தில் கட்டுவது மறுதலிக்கப்படுகின்றது. இவையெல்லாம் முந்தைய சமூக பண்பாட்டு வாழ்க்கை முறைக்கு முரணானது.

இந்த உதாரணங்களை நாங்கள் எங்கும் எதிலும் இன்று காண முடியும். இது எங்கிருந்து, எந்த வழியில் எம்மிடம் வந்து சேர்ந்தது. முன்பு ஒரு பொருளின் பயன்பாடு என்பது, பொருளின் அல்லது பயன்படுத்துபவனின் ஆயுள் வரையானதாகவும், தலைமுறை கடந்ததாகவும் இருந்தது. இது கூட சமுதாய பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டது.

இன்று பொருள் பயன்பாடு என்பது குறுகிய ஆயுள் கொண்டதாக, அதை அடிக்கடி மாற்றிக் கொள்வதன் மூலம் கைவிடுகின்ற பண்பாட்டு மாற்றம் நடந்தேறுகின்றது. இது தான் தனிமனித பண்பாட்டுக்கு அடிப்படையாக இருக்கின்றது. பொருள் பற்றிய இந்தக் கண்ணோட்டம் தான், மனித உறவுகளுக்கும் பொருந்தும்.

தன் வாழ்க்கைத் துணையை மாற்றிக் கொள்ளும் விருப்பமும், விதம்விதமாக மற்றொருவர் மூலம் பாலியலை நுகர்வது பற்றிய வக்கிரமான தேர்வும், இயல்பாக வாழ்க்கைக்குள் புகுந்து வருகின்றது. பொருள் நுகர்வு பற்றிய பொதுக் கண்ணோட்டத்துக்கு முரணாக, மனித உறவுகள் இருப்பதில்லை. இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும். இருவர் இணைந்த வாழ்வு குறுகிய காலத்தில் அலுத்துப் போவதும், அதனாலான முரண்பாடுகளும் தோன்றுகின்றது. இது நவதாராளமயத்தின் சாரமாக இருப்பதால், மனிதர்கள் சேர்ந்து வாழும் மனித இயல்பையே தகர்த்து வருகின்றது.

இன்று குடும்ப முரண்பாடுகள், விவாகரத்துக்களில் இந்தக் கூறே, பிரதானமான பாத்திரத்தை வகிக்கின்றது. நவதாராள தனிவுடமை சார்ந்த சமுதாயக் கண்ணோட்டம் சார்ந்து, அந்த வாழ்க்கை முறைக்குள்ளான முரண்பாடுகள் இவை. இதை வெறுமனே மொட்டையாக ஆணாதிக்க சுலோகங்கள் மூலம் புரிந்துகொள்ள முடியாது. மாறாக நவதாராள சந்தை விதிக்கும், அதன் வாழ்க்கை முறைக்கும் உட்பட்டதே பெரும்பாலான மணமுறிவுகளும், இணைந்து வாழ விரும்பாமையிலான பொது தெரிவுமாகும்.

### 6 ஆம் பக்க தொடர்ச்சி

மறுபக்கம் திரும்பக்கூடிய ஆபத்தை மைத்திரிபால எதிர்நோக்கியுள்ளார். மஹிந்த ராஜபக்ஷவின் பிரச்சார நடவடிக்கைகளில் கொள்கையை மிதித்துக் கொண்டு அவதூறுகளும், சேறுபூசுதலும் மற்றும் இனவாதமும் மேலெழுந்தன. அதேபோன்று மைத்திரியின் பிரச்சார நடவடிக்கைகளின்போதும் கொள்கை சம்பந்தமான பேச்சுக்கள் மறைக்கப்பட்டன. அதற்கு பதிலாக "மஹிந்தவை விரட்டுவோம்" என்ற சுலோகம் மாத்திரமே மேடைக்கு வந்தது. இறுதியாக பலதரப்பட்ட கொள்கைகள் பின்தள்ளப்பட்டு பல்வேறு விதமான பேச்சுக்கள் மேடைக்கு வந்தமை, தேர்தலுக்கு வந்தமை மைத்திரிக்கு வாய்ப்பாக இருந்தாலும் தேர்தலுக்கு பின்பு அவருக்கு அது வாய்ப்பாக இருக்காது. " மஹிந்தவிற்கு மூன்று முறை முடியாது" என்ற சுலோகத்திலிருந்து "மோசடியான குடும்ப ஆட்சிக்கு முடிவுகட்டுவோம்" என்ற கட்டம் வரை பிரச்சாரத்தை முன்னெடுத்த மக்கள் விடுதலை முன்னணி கொள்கை சம்பந்தமான பேச்சுக்களை மறைக்க ஒத்துழைத்தது. தவிரவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையையோ அல்லது அரசியலமைப்பையோ பற்றி பேசுவதற்கு எதுவுமே இல்லாததால் இறுதியாக இந்த நிலைமைக்கு ம.வி.மு தள்ளப்பட்டது. இந்த தேர்தல் நடவடிக்கைகளில் தனது கொள்கைகளை விளக்கி ஏனைய வேட்பாளர்கள் சம்பந்தமான விமர்சனங்களை முன்வைத்தது இடதுசாரிய முன்னணி மாத்திரமே. குறிப்பாக மஹிந்த மற்றும் மைத்திரியின் கொள்கைகள் சம்பந்தமாக தரமான விமர்சனத்தை துமிந்த நாகமுவ முன்வைத்தார். இருபக்கத்தாலும் அவர் தாக்கப்பட்டது அதனால்தான். எவ்வாறாயினும், கொள்கை சம்பந்தமான பேச்சுக்களை தவிர்த்து ஜனாதிபதித் தேர்தல் முடிந்திருப்பதோடு, விதைத்தவற்றின் விளைச்சலை எதிர்காலத்தில் அறுவடை செய்ய முடியும். எது எப்படியிருந்தாலும், இந்த தேர்தலில் நாம் கவனிக்க வேண்டி முக்கிய அம்சம் என்னவெனில், வெற்றி பெற்றிருக்கும் சிங்கள பௌத்த மைத்திரிபால சிறிசேன தமிழ் - முஸ்லிம் மக்கள் மீதான இன ஒடுக்குமுறை குறித்து வாய் திறந்திராத ஒருவர். தேர்தல் காலத்தில் மஹிந்தவை போன்றே அவரது சிங்களவாத பிரச்சார நடவடிக்கைகளும் இருந்தன. போர் வீரர்களை சர்வதேசத்திற்கு காட்டிக் கொடுக்கப் போவதில்லை என சபதம் செய்தமை, நாட்டின் ஒருமைப்பாட்டை உயிர்த்தியாகத்துடன் பாதுகாப்பதாக வழங்கிய உறுதிமொழி போன்றவை அவரது சிங்களவாத சிந்தனைக்கு எடுத்துக்காட்டுகளாகும். அவரது தேர்தல் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டிருந்த லிபரல் புத்திஜீவிகள் ஜனநாயக உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டிய தேவை குறித்து பேசினாலும், தேசியப் பிரச்சினை சம்பந்தமாக எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் ஜனநாயக உரிமைகள் சம்பந்தமாக ஊமைகளாகவே செயற்பட்டனர். இச்சந்தர்ப்பத்தில் பேராசிரியர் சுமனசிறி கமகே அவர்களின் கருத்தையும் பதிய வேண்டியுள்ளது. கேள்வியொன்றுக்கு பதிலளித்த அவர் "புதிய அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைக்காதவாறு பார்த்துக் கொள்ள சிங்கள பௌத்த இனவாதத்திற்கு எண்ணெய் ஊற்றும் கைங்கரியத்தில் மஹிந்த ஈடுபடப்போகிறார். கிடைக்கும் தகவல்களின்படி சுதந்திரக் கட்சியின் இன்றைய தலைமையில் பொதுத் தேர்தலை சந்திக்க ஜாதிக ஹெல உறுமய விருப்பமாக உள்ளது. இதனால், இனவாத கருத்துக்கள் நாட்டில் மீண்டும் ஊசலாடுவதை தவிர்க்க முடியாது. இதற்கு எதிரான மாற்று அமைப்பை பலப்படுத்துவதன் ஊடாகவே இதனை தோற்கடிக்க முடியும். அதற்காக இடதுசாரியத்தை பலப்படுத்த வேண்டும். மைத்திரியாலோ, மஹிந்தவாலோ இதனைச் செய்ய முடியாது. அவர்களால் இனவாதத்தை ஊக்குவிக்க மட்டுமே முடியும். சிங்கள பௌத்த சக்திகளை வழிநடத்துவது மஹிந்த தான் எனவும், மைத்திரிபால அப்படிப்பட்டவர் அல்லவெனவும் சிலர் வாதிடுகிறார்கள். ஆனால் உண்மையிலேயே வெளிப்பட்ட கருத்து என்னவெனில், முரண்டுபிடிக்கும் சிங்கள பௌத்தரா, சாந்தமே உருவான சிங்கள பௌத்தரா என்பதாகும். இதன்போதுதான் ஹெல உறுமயவும் மற்றும் சில இடதுசாரி கட்சிகளும் மைத்திரியுடன் இணைந்தன. இந்த இரண்டிலுமே சிங்கள பௌத்த சாயம் பூசப்பட்டுள்ளது. மைத்திரியின் 100நாள் திட்டத்தை எடுத்துக் கொண்டால், அதில் அதிகமானவை ஹெல உறுமயவின் திட்டங்களாகும். இச்சந்தர்ப்பத்தில் நவதாராளமயம் கூட சிக்கலில் மாட்டியுள்ளது. இந்தச் சிக்கலிலிருந்து விடுபட நவதாராளமயத்தையும், சிங்கள பௌத்த கோட்பாட்டையும் பாதுகாக்க 2005ல் கொண்டுவந்த முரண்டுபிடிக்கும் சிங்கள பௌத்தருக்கு பதிலாக சாந்தமே உருவான சிங்கள பௌத்தர் கொண்டுவரப்பட்டார். சில இடதுசாரி நபர்கள் இதிலிருந்து தப்பிக்கவே இது சிங்கள பௌத்தத்திற்கு சார்பானதல்ல எனக் கூறுகிறார்கள். இதனூடாக தமது அரசியல் பக்கச் சார்பை நியாயப்படுத்துகிறார்கள்" என கூறியிருந்தார். இதுதான் உண்மை. இச்சந்தர்ப்பத்தில் இன ஒடுக்குமுறைக்கு எதிராக, அடக்குமுறைக்கு எதிராக போராடும் வரலாற்று பாரம்பரியத்தை முன்னெடுக்கும் சவால், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் சவால் இடதுசாரிகளின் கைகளிலேயே தங்கியுள்ளது. தேசியப் பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக் கொடுப்பதில் மேட்டுக்குடி அரசியல் தோல்வியடைந்துள்ளது. இந்தப் பின்னணியில் அந்தப் பாரிய கடமைக்கு தலைமை தாங்கும் பொறுப்பை இடதுசாரியம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

படிப்பகம்



# இடதுசாரியத்தை ஏன் பலப்படுத்தவேண்டும்?

- சங்கானைக் என் வணக்கம்
- எச்சாமம் வந்து எதிரி அழைத்தாலும்
- நிச்சாமக் கண்கள் நெருப்பெறிந்து நீறாக்கும்

இது அன்றைய இடதுசாரிகளின் போராட்ட அறைகூவலுக்கு சங்கானை நிச்சாமம் மக்களின் எழுச்சியினைப் போற்றுகின்ற கவிதைக்குரல். சுபத்திரன் கவிதையின் சூடேறிய வரிகள்

சங்கானை சங்காயாய் மாறிக் கொண்டிருக்கின்றது என்று அமிர்தலிங்கம் அன்று பாராளுமன்றத்தில் அபாயச் சங்கொலி எழுப்பி ஒப்பாரி வைக்கும் அளவுக்கு போராட்டத் தீயானது சுவாலைகள் விட்டெரிந்து சமூகக் கொடுமைகளைப் பொசுக்கித் தள்ளிய காலம் ஒன்றிருந்தது. இடதுசாரியம் சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராக பரந்துபட்டரீதியில் மக்களை அணிதிரட்டி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு வழிகாட்டி போராட்டங்களின் மூலம் வென்று நிலைநிறுத்திக் கொண்டவைகளே இன்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் அநுபவிக்கும் சமூக உரிமைகள். இது பற்றிய வரலாற்று மீள்பார்வை ஒன்று போராட்டம் பத்திரிகையின் இந்த இதழிலேயே வெளிவருகின்றது. அக் கட்டுரையினை வாசித்து இடதுசாரியம் எவ்வாறு தமிழ் மக்கள் மத்தியில் பலம் வாய்ந்த ஒரு போராட்ட அமைப்பாக வளர்ந்திருந்தது என்பதை நீங்கள் அறியலாம்.

வரலாறு இவ்வாறு இருந்தபோதும் இடதுசாரியத்துக்கும் அதன் நடைமுறைக்கும் பரிச்சயமில்லாத இளைய தலைமுறை ஒன்றைகடந்த முப்பது ஆண்டு காலப் போர் இன்று விட்டுச் சென்றிருக்கின்றது. “தமிழர்கள் ஒடுக்கப்படுகிறார்கள் அது சரி ஆனால் ஒடுக்கப்படுகின்ற சிங்கள மக்கள் என்று நீங்கள் குறிப்பிடுவது யார் அவர்கள் எங்கே இருக்கிறார்கள” என்று கேட்டுமளவுக்கு சமூகப் பொருளாதார ஒடுக்குமுறைகளைப் பற்றியும், இனம் மத ஒடுக்குமுறை மட்டுமல்ல, அவற்றையும் தாண்டி பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு மக்கள் ஆளாகிறார்கள் என்பதுவும் பேசப்படாத விடயமாகவே போய் விட்டதற்கு அந்த இளம் தலைமுறையினர் காரணமல்ல. இனவாதம் வலதுசாரி அரசுகளால் தூபமிடப்பட்டு வளர்க்கப்படுகின்ற ஒன்று தான். ஒடுக்கப்படுகின்ற சுரண்டப்படுகின்ற தொழிலாளர் உழைப்பாளர் சக்திகள் கொண்டுள்ள சமூகப் பொருளாதார முரண்பாடுகளையும் ஏனைய முரண்பாடுகளையும் பின்தள்ளிவிட்டு பிரதான முரணாக இனப்பிரச்சனை முன்தள்ளப்பட்டு இருந்தது. இனப்பிரச்சனை நெருக்கடிக்குள் வாழ்ந்த இந்தத் தலைமுறை, வேறு முரண்பாடுகள் மற்றும் ஒடுக்குமுறைகள் பற்றிய கவனத்தை கொண்டிருப்பது எதிர்பார்க்க முடியாததொன்று.

இந்த இன முரண்பாட்டின் மீது போராட்டத்தினைக் கட்டியமைத்தவர்களும் வலதுசாரிகளாகவே இருந்து இடதுசாரிக் கருத்துக்கள் மற்றும் ஏனைய சமூகப் பொருளாதார ஒடுக்குமுறைகளைப் பற்றி பேச மறுத்தவர்களாகவே அல்லது அக்கருத்துகளைக் கொண்டவர்களை துடைத்து அழித்தவர்களாகவே இருந்தனர். 30 வருடங்களாக வலதுசாரி கருத்தமைவுக்குள் பிறந்து வளர்ந்தவர்களுக்கு இடதுசாரியம் புதிதான ஒன்றாக இருப்பதில் ஆச்சரியம் இல்லை. அது அவர்களின் தவறுமல்ல.



இன மத சமூகக் கோடுகளைத் தாண்டி ஒடுக்கப்படுகின்ற சுரண்டப்படுகின்ற தொழிலாளர் உழைப்பாளர் சக்திகள் திரண்டுவிடக் கூடாது என்கின்ற தேவை வலதுசாரிகளுக்கு எப்பவுமே உண்டு. எனவே இன மத வேறுபாடுகளை முன்னிலைக்கு எடுத்து வருவதற்கான தேவையும் வலதுசாரி சக்திகளுக்கே உண்டு. எனவே தான் கடந்த 66 வருட வலதுசாரி ஆட்சிகள் மாறி மாறி ஆட்சிக்கு வந்திருந்தும் இனப்பிரச்சனையானது மேலும் மேலும் ஆழப்படுத்தப்பட்டு 30 வருட கால அழிவுப் போருக்குள் நாட்டினையும் நாட்டு மக்களையும் இழுத்து விட்டதுடன், பிராந்திய மற்றும் மேற்கத்திய நாடுகளின் அரசியல் நிகழ்ச்சிநிரலுக்குள் சிக்கிக் கொள்ளுமளவுக்கு நாடு கொண்டு செல்லப்பட்டது- முதலாளித்துவ வலதுசாரி சக்திகள், அவர்கள் தமக்குள்ளான ஆட்சியதிகாரப் போட்டிக்கும் மக்களைக் கட்டியாளுவதற்கும், மக்கள் தமது உண்மையான பிரச்சனைகளை உணராது வைத்திருப்பதற்கும் வசதியானதான இருப்பது இன மத பாகுபாடுகளை எரியும் பிரச்சனையாக உருவாக்கி வைத்தலே ஆகும்.

முதலாளித்துவ அரசமுறைமை தன்னுடைய அந்த முறைமையின் காரணமாகவே உற்பத்தியாக்கப்படும் பிரச்சனைகள் எதற்கும் எவ்வாறு அந்த முறைமைக்குள்ளேயே தீர்வுகளைத் தரமுடியும்? அந்த முறைமை தோற்றுவிக்கும் பிரச்சனைகள் அந்த முறைமை இல்லாது போகின்றபோது தான் இல்லாது போகும். முதலாளித்துவ முறைமைகளே தாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு காரணம் என்பதை மக்கள் புரிந்துகொள்ள முடியாமல் தடுத்து வைப்பதினூடாகவே முதலாளித்துவ முறைமை தன்னுடைய இருப்பினை எதிர்ப்புகள் இன்றி பாதுகாத்துக் கொள்ள முடியும். எனவே தான் உண்மையான பிரச்சனைகள் மக்கள் உணரா வண்ணம், மக்கள் தனக்கெதிராக அணிதிரளாமல் வைத்திருப்பதற்கும் வேறு பிரச்சனைகளை மக்கள் முன்தள்ளி அவர்களை அதற்குள் ஆழ்த்தி வைக்கும் கைங்கரியங்களை செய்யும். அவ்வாறு செய்யாதிருப்பின் அந்த முறைமையின் இருப்பு மக்களால் நிராகரிக்கப்பட்டுத் தூக்கியெறியப்படும்.

இதனையே நாங்கள், மக்களது புரட்சிகர நடவடிக்கைகளால் போராட்டங்களால், முதலாளித்துவ முறைமைகளுக்கு முன்னதான நிலவுடைமை மன்னராட்சி முறைமைகள் ஒழிக்கப்பட்டு அவை இருந்த இடத்தில் மாற்றீடாக முதலாளித்துவ முறைமை தோற்றுவிக்கப்பட்டதனை வரலாற்றில் காண்கிறோம். மன்னராட்சியின் கீழ் மக்கள் அனுபவிக்க முடியாத ஜனநாயகத்தை, மக்கள் தாம் அடைந்துகொள்வதற்காக அந்த முறைமையினையே தூக்கியெறிந்து மன்னராட்சி முறைமையை விட மேம்பட்ட முற்போக்கான முதலாளித்துவ முறைமைகளை மக்கள் தான் தோற்றுவித்தார்கள். மன்னராட்சி முறைமையை மக்கள் உலகெங்கும் தோற்கடித்தது போலவே, முதலாளித்துவ சுரண்டல் முறைமை தோற்றுவிக்கின்ற, மக்கள் எதிர்கொள்ளும் உண்மையான பிரச்சனைகள், முதலாளித்துவ முறைமைக்குள் கொழுக்கும் மூலதனச் சக்திகளை தோற்கடிக்கும் இன்னொரு முறைமை மாற்றத்துக்கு மக்களை அணிதிரட்டிவிடும் என்பதற்காகவே முதலாளித்துவ தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காய் அனைத்து நேரடியான மறைமுகமான சூட்சுமமான அடக்குமுறை வடிவங்களைக் கைக்கொள்வதோடு, தனது முறைமை உற்பத்தியாக்கும் பிரச்சனைகளை மக்கள் இனம்கண்டுகொண்டு முரண்படாத வண்ணம் வேறு பிரச்சனைகளை உருவாக்கி அவற்றை முன்தள்ளும். அவற்றை பாரிய முரண்பாடாக உருவாக்கி போர்களையும் நாசங்களையும் விளைவிக்கும்.

எனவே ஆட்சிமுறைமை முதலாளித்துவ முறைமையாக இருக்கின்றவரை அந்த முறைமைக்குள்ளேயே தீர்க்கப்படக்கூடிய இனப்பிரச்சனைகளைக் கூட நேர்மையான முறையில் முதலாளித்துவ முறைமை தீர்க்க முயலாது. அத்தோடு இன்றுள்ள ஏகாதிபத்திய நவதாராளவாதப் பொருளாதார முறைமை கொண்ட உலகமயமான ஏகாதிபத்திய முதலாளித்துவம் அதாவது நமது நாட்டு நிலம், நீர், கடல், கனிமங்கள் போன்ற அனைத்து வளங்களும், அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளும், அறிவுத்துறை சேவைத்துறைகளும் எமது நாட்டின் சொந்தக் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு உலக மூலதனங்களால் கட்டுப்படுத்தப்பட்டு உள்நாட்டு மக்கள் கூலிகளாக ஒட்டச் சுரண்டப்பட்டு தேசங்கள், சொந்தக் கலாச்சாரங்கள், மொழிகள் அழிவுக்கும் சிதைவுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கின்ற ஆபத்திலிருக்கின்ற முழு நாட்டு மக்களதும் சுயநிர்ணய உரிமை ஏகாதிபத்தியங்களால் மிதிக்கப்பட்டிருக்கின்றபோது அதற்கு ஒத்திசைவாக இருக்கின்ற உள்நாட்டு முதலாளித்துவ ஏற்பாட்டாளர்களின் ஆட்சிகள் தேர்தல்கள் மூலம் ஏகாதிபத்தியத்தின் நவதாராளமய பொருளாதாரத்துக்கு கூடிய நன்மை யாரால் கிடைக்கும் என்பதைப் பொறுத்து ஏதாதிபத்தியங்களுக்குள் இடையில் எழுகின்ற சொந்த முரண்பாடுகளைப் பொறுத்து ஆட்சிகள் மாற்றப்படுமே ஒழிய அதே முறைமை தொடர்ந்தும் கோலோச்சும்.

**14 ஆம் பக்கம் பார்க்க...**

படிப்பகம்

# வடக்கில் இடதுசாரி இயக்கம் ஆரம்பம்

பிரித்தானியரின் ஆட்சியில் இலங்கை இருந்தபோது 1927 ம் ஆண்டு டொனமூர் அரசியல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின்படி நாட்டிலிலுள்ள 21 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் வாக்குரிமை உண்டு என பிரகடனப்படுத்தப்பட்டு முதலாவது சட்டசபைத் தேர்தலை பிரித்தானிய அரசு இலங்கையில் நடத்தியது. இலங்கைக்கு முழு சுதந்திரம் வேண்டும் என்று கூறி சிங்கள தமிழ் தலைவர்கள் அத்தேர்தலை பகிஸ்கரிப்பது என்று முடிவு செய்தார்கள்.

ஆனால் தேர்தலின் போது சிங்கள தலைவர்கள் பகிஸ்கரிப்பில் கலந்துகொள்ளாது தேர்தலில் கலந்துகொண்டு சட்டசபைக்கான அங்கத்தவர்களை தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் தமிழர்களோ சிங்கள், தமிழ் தலைவர்களின் கூட்டு முடிவின்படி வடக்கில் தேர்தலை பகிஸ்கரித்தார்கள். இதனால் தமிழர்களுக்கு ஒதுக்கப்பட்ட நாலு ஆசனங்களுக்கான சட்டசபைக்கான அங்கத்துவத்தை இழந்தார்கள். இந்த பகிஸ்கரிப்பானது தமிழர்களின் முற்போக்கு நடவடிக்கை என்று அன்று கருதப்பட்டது. இரண்டாவது சட்டசபைத் தேர்தல் நடைபெற்றது. அவ்வேளையில் இங்கிலாந்து பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்று இலங்கை திரும்பிய எஸ்.ஏ.விக்கிரமசிங்கா, ஆர்.டி.சில்வா, என். எம்.பெரேரா, பிலிப் குணவர்த்தனா, ரொபேட் குணவர்த்தனா, லெஸ்லி குணவர்த்தனா போன்ற முற்போக்காளர்கள் இரண்டாவது சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டனர். இதில் என்.எம்.பெரேராவும் பிலிப் குணவர்த்தனாவும் வெற்றி பெற்றனர்.

1935 ம் ஆண்டு டிசம்பர் மாதம் மேலே கூறப்பட்ட அனைவரும் அத்துடன் வேறு சிலரும் இணைந்து லங்கா சமசமாஜக்கட்சியை ஆரம்பித்தனர். அதனது அரசியல் தாக்கம் வடபகுதியிலும் வெளிப்பட்டது. அதில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ். தர்மகுலசிங்கமாகும். இவர் ஒரு சட்டத்தரணி. எனவே இவர் துணிச்சலுடன் வேறும் சிலருடனும் சேர்ந்து வடமராட்சியில் லங்கா சமசமாஜக் கட்சியை நிறுவினார். அக் கட்சியின் தலைமையில் பஸ் தொழிலாளர் சங்கம், சுருட்டுத் தொழிலாளர் சங்கம், சாதி அடக்குமுறைகளை எதிர்க்கும் சங்கம் போன்ற சங்கங்களை நிறுவி அந்த மக்களுக்காக வாதாடி சில வெற்றிகளை வென்றெடுத்துக் கொடுத்து வந்தார்.

இதனால் சமசமாஜக் கட்சியின் செல்வாக்கு வட மாகாணத்தில் பல பகுதிகளிலும் பரவத் தொடங்கியது. பருத்தித்துறை, வலவெட்டித்துறை, கரவெட்டி, யாழ்ப்பாணம், சுன்னாகம் போன்ற இடங்களில் அக்கட்சியின் செயற்பாடுகள் இடம்பெற்று வந்தது. இவ்வாறு வளர்ச்சி பெற்று வருகின்றபோது 1939 ம் ஆண்டு இரண்டாவது உலகயுத்தம் ஆரம்பமாகும் உச்சக்கட்டம். அந்த நேரம் சோவியத் ரஷ்யா தன்னை நாஜி ஹிட்லரிடம் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக போலந்தின் ஒரு பகுதியைத் தரும்படியும் அதற்குப் பதிலாக ரஷ்யாவின் பகுதியில் 3 மடங்கு நிலத்தை தருவதாகவும் யுத்தம் முடிய நிலத்தை நிலத்தை மாற்றிக் கொள்வோம் எனக் கேட்டது. அதற்கு போலந்து அரசு மறுத்தது மட்டுமல்ல, ஹிட்லருடன் ஒப்பந்தம் செய்து போலந்து அரசு சரணடைந்தது. எனவே சோவியத் ரஷ்சியா தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தான் கேட்ட பகுதியைக் கைப்பற்றியது. மேற்படி நிகழ்ச்சி ஐரோப்பாவில் ஏற்பட லங்கா சமசமாஜக் கட்சிக்குள், பெரிய வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டது. சோவியத் ரஷ்சியா செய்தது சரி என்றும், ஸ்டாலின் செய்தது பிழை என்றும் விவாதம் நடந்தது. விவாத முடிவில் எஸ்.ஏ.விக்கிரமசிங்கா, பீற்றர் கெனமன், எம்.ஜி.மென்டிஸ், ஆரியவன்ஸ குணசேகரா, ய.ஆரியரட்ணா, சரணங்க தேரர் போன்றோர் லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். என். எம்.பெரேரா, பிலிப் குணவர்த்தனா, ரொபேட் குணவர்த்தனா, லெஸ்லி குணவர்த்தனா, கொல்வின். ஆர்.டி.சில்வா போன்றோர் ஸ்டாலின் ஆக்கிரமிப்பாளனும் ரஷ்சிய ஏகாதிபத்திய சர்வாதிகாரி என்றும் கூறி ரொக்ஸி தான் மார்க்சிய லெனினியவாதி என்றும் கூறி ரொக்ஸியை அரசியல் குருவாக ஏற்றுக்கொண்டனர். அன்றிலிருந்து இன்றுவரை முதலாளித்துவத்தைப் பாதுகாக்கும் பாதுகாவலராகவே ரொக்ஸிஸ்டுகள் செயற்படுகிறார்கள். இலங்கையில் மட்டுமல்ல உலகம் பூராவும் அவர்களது செயற்பாடுகள் அவ்வாறே நடைபெறுகிறது.

வெளியேற்றப்பட்ட எஸ்.ஏ.விககிரமசிங்கா, பீட்டர் கெனமன், எம்.ஜி.மென்டிஸ், ஆரியவன்ஸ குணசேகராவும் ஏனைய வெளியேற்றப்பட்ட மேலும் பலரும் சேர்ந்து 1940 ம் ஆண்டு ஐக்கிய சோஷலிசக் கட்சியை உருவாக்கி செயற்பட்டு வந்தனர். பின்னர் 1943 ம் ஆண்டு சோஷலிசக் கட்சியை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்று பெயர் மாற்றிக் கொண்டனர். இக்காலகட்டத்தில் வடக்கிலிருந்து இங்கிலாந்து சென்று பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று இங்கு வந்த பொன். கந்தையா, அ.வைத்திலிங்கம் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற என்.சண்முகதாசன், மு.கார்த்திகேசன் போன்றோரும் இன்னும் சிலரும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து முழுநேர கட்சி ஊழியர்களாயினர். என்.சண்முகதாசன் தொழிற்சங்க இயக்க வேலையை பொறுப்பேற்று செயல்பட்டார்.

இவர்கள் நால்வரும் வடக்குக்கு வந்து தமக்கு ஏற்கனவே அறிந்தவர்களாக இருந்த மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட்டுக்களை கம்யூனிஸ்ட் கட்சியில் இணைத்து இயங்கத் தொடங்கினார்கள். ஏற்கனவே வடபகுதியில் லங்கா சமசமாஜக் கட்சியினரால் அறிமுகப்படுத்தப்பட்ட மார்க்ஸிச லெனினியத்தை ஏற்றுக்கொண்ட மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்டுக்கள் தற்பொழுது லங்கா சமசமாஜக் கட்சியின் போக்கில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு அதிலிருந்து விலகி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார்கள். வடமராட்சிப் பிரதேசத்தில் பொன் கந்தையாவும் வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் அ.வைத்திலிங்கமும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மு.கார்த்திகேசனும், கே.கே.எஸ் பிரதேசத்தில் சு.வே.சீனிவாசகர், வ.பொன்னம்பலம் போன்றோர் வேலை செய்தனர். இதனால் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வேகமாக வளரத் தொடங்கியது. மு.கார்த்திகேசன் அவர்களின் முயற்சியின் காரணமாக யாழ்நகரில் எம். சி.சுப்பிரமணியம், கே.டானியல், டொமினிக் ஜீவா, ராமசாமி ஐயர், வீ.ஏ.கந்தசாமி போன்றோர் வென்றெடுக்கப்பட்டனர். சிறுபான்மை மகாசபையில் இவர்கள் அங்கத்தவர்களாகவும், பிரதான ஊழியர்களாகவும், இருந்தனர். அதனால் நகரப் பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு வளரத் தொடங்கியது. கம்யூனிஸ்ட் கட்சி சிறுபான்மை தமிழருக்கு பல வழிகளில் உதவி செய்தது. அதே போன்று பஸ் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், சலூன் தொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள் மத்தியில் போர்க்குணத்துடன் வேலை செய்தது. இத் தொழிலாளர்களை, தாழ்த்தப்பட்ட மக்களை, யார் யார் அடக்குகிறார்களோ அவர்களுக்கு எதிராக அவர்களது தாக்குதல்களை தாங்கிக் கொள்ளவும், திருப்பித் தாக்குதல் தொடுப்பதுமான செயற்பாடுகள் மூலம் செயற்பட்டது. 1952 ம் ஆண்டு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி முதலாவது வடபிரதேச வாலிபர் சம்மேளன மாநாட்டை கே.டானியல், வி.ஏ.கந்தசாமி, மேன் முத்தையா போன்றோர் முன்னின்று நடத்தினர். அதில் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களான எஸ்.ஏ.விக்கிரமசிங்கா, பீற்றர் கெனமன் ஆகியோர் பங்குபற்றி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க உறுப்பினர்களை உற்சாகப்படுத்தினர். 1947 இல் பொன் கந்தையா இலங்கையின் பாராளுமன்ற தேர்தலில் பருத்தித்துறை தொகுதியின் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்டார். அதில் அவர் தோல்வியடைந்தாலும் நிறைய கம்யூனிஸ்ட் வாலிபர்களையும் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களையும் திரட்டினார். அதனூடாக கட்சிக்குப் பலம் கூடியது. 1952 பாராளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு சிறியளவு வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். என்றாலும் கட்சி மேலும் பலமடைந்தது. வடமராட்சிப் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு பெரும் செல்வாக்கு வளர்ந்தது. ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியிலும் கட்சிக்கு கிளைகள் உருவாகியது. இன்றும் நினைவுகூரப்படும் 1947 பொது வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட ஜி.சி.எஸ்.யு சங்க அரசாங்க எழுதுவினைஞர் வி.கந்தசாமி யாழ் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். அவரும் வடக்கில் எழுந்த முற்போக்கு கருத்துக்களால் கவரப்பட்டவர் என்பது குறிப்பிடத் தக்கது.

1953 இல் நடைபெற்ற தேசிய ஹர்த்தாலின் போது வடபகுதியிலும் பஸ் தொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள், சலூன், சலவைத் தொழிலாளர்கள், கள் இறக்கும் தொழிலாளர்கள் என பல தரப்பட்ட தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களும் ஆசிரியர்களும், மாணவர்களும் பெருமளவில் பங்குபற்றினர். இந்த ஹர்த்தாலில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும், தமிழரசுக் கட்சியும், அதன் தொழிற்சங்கங்களும், அதன் ஆதரவாளர்களும் பொதுமக்களும் பெருமளவு கலந்துகொண்டு வடபகுதி மக்களின் ஆதரவை தென்னிலங்கை தொழிலாள வர்க்கத்துக்கு வழங்கினர். இதன் மூலம் அடங்கிக் கிடந்த தமிழ் மக்கள் மத்தியில் போர்க்குணம் வளர ஆரம்பித்தது. 1956 இல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி 4 தொகுதிகளில் தேர்தலில் நின்றது. யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய தொகுதிகளில் போட்டியிட்டது. முறையே மு.கார்த்திகேசன், அ.வைத்திலிங்கம், வி.பொன்னம்பலம், பொன்.கந்தையா ஆகியோர் போட்டியிட்டனர். அதில் பருத்தித்துறை தொகுதியில் பொன். கந்தையா அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். ஏனைய மூவரும் கணிசமான வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தனர். ஆனால் அம் மூன்று தொகுதிகளிலும் பல வாலிப சங்கக் கிளைகளை உருவாக்க முடிந்தது.

அதேபோல் சமசமாஜக் கட்சியினரும் 4 தொகுதிகளிலும் போட்டியிட்டனர். ஆனால் அவர்கள் கொஞ்சம் கொஞ்சம் வாக்குகளைப் பெற்றனர். தோழர் பொன். கந்தையா எம்.பி ஆனதும் நிலமற்ற விவசாயிகளுக்கு அரசாங்கக் காணிகளை பெற்றுக் கொடுத்தும், கல்வி கற்கும் உரிமை அற்றிருந்த தாழ்த்தப்பட்ட

14 ஆம் பக்கம் பார்க்க...

> **“1958 டிசம்பர் இல் நடைபெற்ற சிறுபான்மை தமிழர் மகாசபையில் கோரிக்கை முன்வைத்து டிசம்பர் 13 க்குள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவமாக தேனீர் கடைகள், உணவகங்கள், கோவில்கள் திறந்துவிடப்பட வேண்டும் இல்லையேல் அவைகளுக்கு முன் சத்தியாக்கிரகம் நடத்தப்படும் எச்சரிக்கை விடப்பட்டது. இது வடபகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கம்யூனிஸ்ட் கட்சியும் சிறுபான்மைத் தமிழர் மகாசபையும் அதற்கான தயாரிப்புக்களை நகரத்திலும் கிராமங்களிலும் செய்யத் தொடங்கியது.”**



## 11 ஆம் பக்க தொடர்ச்சி

மக்களுக்கு பள்ளிக்கூடங்களை அமைத்துக் கொடுத்தும் பல உதவிகளைச் செய்து கொடுத்தார். 1947 ம் ஆண்டுகளின் பின்பு பாராளுமன்றத்திலும், மாநகர சபைகளிலும், பட்டின சபைகளிலும், கிராம சபைகளிலும்,போட்டிபோட்டு அதனூடாக தேர்தலில் வெற்றி பெற்று அவைகளில் அங்கத்துவம் பெற்று பொதுமக்களுக்கு சேவை செய்வதை கட்சியின் வளர்ச்சிக்கு பிரதான வழியாக கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக்க கட்சியும் கருதி செயற்பட்டது. அந்த முயற்சியின் பலனாக 1947 இலிருந்து கிராமசபை உறுப்பினராக சி.வே.சீனிவாசகம் தெரிவானார். கணபதிப்பிள்ளை காங்கேசன்துறை பட்டினசபையில் உறுப்பினரானார். சங்கானை பட்டினசபையைக் கைப்பற்றி மான். எம். முத்தையா தலைவரானார். வைரமுத்து, பசுபதி போன்றோர் அங்கத்தவர்களாயினர். வல்வெட்டித்துறையின் திருப்பதி தலைவராக இருந்தார். கரவெட்டி கட்டவேலியில் ஜெயசிங்கம் போன்றோர் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர்களாகவும் ஆதரவாளர்களாகவும் இருந்து பொது மக்களுக்கு சேவையாற்றினர். இவற்றில் மிகவும் குறிப்பிடக்கூடியது மு.கார்த்திகேசன் கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேச செயலாளராக இருந்து யாழ்.மாநகர சபை தேர்தலில் 1954 ம் ஆண்டு போட்டியிட்டு வெற்றி பெற்றது. இந்நிகழ்ச்சியானது கம்யூனிஸ்ட்டுகள் வட பகுதியில் பலப்பட்டு வருகிறார்கள் என்பதை பறைசாற்றியது. அதேபோல் சமசமாஜக் கட்சியின் சார்பில் யாழ்-மாநகர சபையில் அ.விசுவநாதன், எஸ்.துரைராஜசிங்கம் உடுப்பிட்டி கிராமசபை தலைவராக ஆர்.ஆர். தர்மரட்ணம் சுன்னாகம் பட்டினசபை தலைவராக பி.நாகலிங்கம் ஆகியோர் அங்கத்தவர்களாகி பொது மக்களுக்கு சேவை செய்தனர்.

1957 ம் ஆண்டு பாராளுமன்றத்தில் சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்தும்படி சிறுபான்மை தமிழர் மகாசபை 1958 டிசம்பர் இல் நடைபெற்ற சிறுபான்மை தமிழர் மகாசபையில் கோரிக்கை முன்வைத்து டிசம்பர் 13 க்குள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவமாக தேனீர் கடைகள், உணவகங்கள், கோவில்கள் திறந்துவிடப்பட வேண்டும் இல்லையேல் அவைகளுக்கு முன் சத்தியாக்கிரகம் நடத்தப்படும் எச்சரிக்கை விடப்பட்டது. இது வடபகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கம்யூனிஸ்ட் கட்சியும் சிறுபான்மைத் தமிழர் மகாசபையும் அதற்கான தயாரிப்புக்களை நகரத்திலும் கிராமங்களிலும் செய்யத் தொடங்கியது. சாதிவெறியர்களும் பிற்போக்குவாதிகளும் கோவில் திறப்பு, கடைகள் திறப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த திரைமறைவில் பல்வேறு ஆலோசனைகளை மேற்கொண்டாலும் அவர்களால் எதுவும் செய்யமுடியாத நிலைமை. முதலாவதாக அரசாங்கத்தின் சட்டத்தை அமுல்படுத்தும்படி கேட்டே இப் போராட்டம் நடத்தப்படவுள்ளதும் மேலும் யாழ் நகரப்பகுதிகளில் கூடுதலாக தாழ்த்தப்பட்ட மக்கள் செறிந்து வாழுவதும், கம்யூனிஸ்ட் கட்சியும் முற்போக்காளர்களும் இதற்கு ஆதரவு கொடுப்பதும் இப்போராட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்தியது. எனவே டிசம்பர் 13 இல் யாழ் நகரில் உள்ள சுபாஸ் கபே, வை.சி.கு தேனீர்க்கடை, கோவிந்தபிள்ளை தேனீர்க்கடை போன்ற முக்கிய கடைகள் மற்றும் சிறிய உணவகங்கள், தேனீர்கடைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவமாக திறந்துவிடப்பட்டது. அதேபோல் நல்லூர் கந்தசாமி கோவில், வண்ணார்பண்ணை சிவன் கோவிலும் சமத்துவமாக திறந்துவிடப்பட்டது. ஆனால் யாழ் நகரத்தை அண்டிய பிரதேசங்களிலும், கிராமப் பிரதேசங்களிலும் சாதிவெறியர்களினதும் பிற்போக்காளர்களினதும் ஆதிக்கம் மிகக்கூடுதலாக இருந்தபடியால் அங்குள்ள தேனீர்கடைகள், உணவகங்கள், கோவில்கள், குளங்கள் எதுவுமே 1970 வரை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்து விடப்படவில்லை.

1950 கள் வரை வடபகுதி தமிழ் பிற்போக்கு எழுத்தாளர்கள் சாதி அமைப்பை பாதுகாத்து எழுதி வந்தார்கள். அதுதான் தமிழ் இலக்கியமாக இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி பலமடையத் துவங்கியதும் முற்போக்கு எழுத்தாளர்கள் தோன்றத் தொடங்கினர். கே.டானியல், டொமினிக் ஜீவா, கவிஞர் பசுபதி, இளங்கீரன், நீர்வை பொன்னையன், முருகையன், சில்லையூர் செல்வராஜன், அ.ந.கந்தசாமி, பிரேம்ஜி, தெணியான், செ.கணேசலிங்கம், தங்கவடிவேல், ரகுநாதன் போன்றோர் தொழிலாளர், விவசாயிகள், ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தமது படைப்புக்களை எழுதத் தொடங்கினர். பிற்போக்குவாதிகள் இவ் ஆக்கங்களை இலக்கியங்கள் அல்ல என்று நிராகரித்தாலும் இவைகள் தான் மக்கள் இலக்கியங்கள் என்பதை அவர்கள் நிரூபித்தார்கள். அன்று தமிழ் காங்கிரஸ், தமிழ் அரசுக்கட்சிகளின் ஆளுகைக்குட்பட்டிருந்த தமிழ் மக்கள் அவர்களின் பிற்போக்குக் கொள்கைகளை எதிர்ப்பதிலும் அக்கட்சியின் ஆதரவு பெற்ற முதலாளிகள் நிலவுடைமையாளர்களை எதிர்த்து வாய்திறக்க முடியாத நிலையில் இருந்த நேரத்தில் தான் லங்கா சமசமாஜக் கட்சியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் வடபகுதியில் உருவாகி சாதாரண ஏழை எளிய தமிழ் மக்கள், தாழ்த்தப்பட்ட தமிழ் மக்கள் தொழிலாளர்கள், விவசாயிகள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களின் பிரச்சனைகளுக்கு தோள் கொடுத்து உதவி வந்தது. அக்கட்சிகள் நடாத்தும் மேதின ஊர்வலங்கள் கூட்டங்களில் மக்கள் கலந்து கொண்டு வாய்திறந்து சகல பிற்போக்குகளுக்குகெதிராக கோஷ மிட்டு தம்மை புரட்சிவாதிகளாக்கிக் கொண்டார்கள். இவ் இரு கட்சிகளில் 60 களில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி முன்னேறி தொழிலாளர் விவசாயிகளின் கூடுதல் ஆதரவை தேடிக் கொண்டது. 1963 காலகட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஏற்பட்ட தத்துவார்த்த போராட்டத்தில் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. என்.சண்முகதாசன் தலைமையில் புரட்சிவாதிகள் ஒன்றுதிரண்டு புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்தனர்.

......தொடரும்

## 12 ஆம் பக்க தொடர்ச்சி

எனவே இந்த முறைமைக்கு பதிலாக இவற்றையெல்லாம் தூக்கியெறிந்து எழுந்து வர வேண்டிய, இடதுசாரி முறைமை ஒன்று தான் மக்களது உண்மையான பிரச்சனைகளுக்கான வழியாக எம்முன் உள்ளது. இனவாத மதவாதங்கள் முதலாளித்துவத்துக்கு தேவையானதே ஒழிய அனைத்துத் தொழிலாளர்களினதும் உழைக்கும் மக்களினதும் ஐக்கியத்தில் அடிப்படை கொண்டுள்ள இடதுசாரி சோஷலிசத்துக்கு அல்ல. முதலாளித்துவ முறைமையை தோற்கடித்து, ஏகாதிபத்திய மூலதன சுரண்டல் பொருளாதார முறைமைக்குப் பதில் சோஷலிசப் பொருளாதார முறைமையை நிர்மாணிக்கும் இடதுசாரி முறைமையை மக்கள் நிறுவுவதே மக்களது உண்மையான பிரச்சனைகளுக்கான தீர்வாகும்.

## 2 ஆம் பக்க தொடர்ச்சி

நீர்ப்பாசன முகாமைத்துவ பிரகடனத்தை ரத்து செய்யுங்கள். மக்களின்எதிர்ப்புக்குள்ளாகியுள்ள துன்னான, போகஹகொட, கொபைகனே தொழிற்சாலைகளை அகற்றுங்கள். கொலன்னாவை தொகுதி மக்கள் அதிக பெரும்பான்மையால் மைத்திரியை வெல்ல வைத்தனர். இனியாவது 100 நாட்களுக்குள் மீதொடமுல்ல குப்பைமலையை அகற்றுங்கள். இவ்வாறான கோரிக்கைகளை 100 நாட்களுக்குள் நிறைவேற்றுவதற்கு நாங்கள் மக்கள் அமைப்புகளுடன் இணைந்து அழுத்தம் கொடுப்போம். இவை நடைமுறைப்படுத்தப்படாமல் மஹிந்தவை தோற்கடித்ததாகக் கூறினாலும் மஹிந்த தோற்கடிக்கப்படவில்லை என அர்த்தப்படும். உருவத்தை மாற்றினால் மட்டும் போதாது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் போஷகராக மஹிந்த உள்ளார். வெற்றிகள் மக்களுக்கு கிடைப்பதற்காக மக்கள் அரசியல்ரீதியில் அணிதிரண்டு செயற்பட வேண்டும். கட்சி என்ற வகையில் இவ்வாறான பல யோசனைகள் எம்மிடம் உள்ளன. நாங்கள் மக்கள் அமைப்புகள் மற்றும் சக்திகளுடன் இணைந்து இக்கருத்துக்களை மேலும் வளர்த்து அவற்றை நிறைவேற்றிக் கொள்ள மக்கள் கருத்தையும், மக்கள் பலத்தையும் கட்டியெழுப்புவோம்.

## 9 ஆம் பக்க தொடர்ச்சி

தலையிட்டு தங்களுக்கு இலாபம் ஈட்டுகிறார்கள். "வன்னிப் பேரழிவை" நடாத்திய சிங்கள பௌத்த பேரினவாத அரசுக்கு ஊக்கமும்-ஆக்கமும்-உதவி ஒத்தாசையும்-ஆயுதமும்(பயங்கரவாதம் என்று கூறி) கொடுத்தவர்களிடம் "தீர்வை" வாங்கித் தா என அடம் பிடிப்பது நியாயமா?

"தீர்வு" இலங்கை அரசு-இந்தியா-சர்வதேசம் எவரிடமும் இல்லை. அது எங்கள் கைகளில்தான் உள்ளது. ஆம். அது இலங்கைக் குடிமக்களிடம்தான் உள்ளது.

"கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் அது ஒரு மாபெரும் சக்தியாக உருவெடுக்கும்".

இது வரலாறு எமக்கு காட்டும் உண்மை.

1983ல் ஒரு(பிழையான) கருத்தைப் பற்றிக் கொண்டோம். அது மாபெரும் சக்தியாக உருவெடுத்தது. சுயநலத் தலைமைகளின் தவறான முடிவுகளால் இன்று உள்ளதையும் இழந்து நிற்கிறோம்.

ஆனாலும் எங்களிடம் இன்னமும் "வாக்கு" என்ற ஆயுதம் ஒன்று உள்ளது. அதனைச் சாதுரியமாகப் பயன்படுத்துவதற்கான வழிமுறை ஒன்று உண்டு. அதுதான் இலங்கை குடிமக்களின் ஒற்றுமை. சிங்கள மக்களுடனான ஒற்றுமை.

சிங்கள-பௌத்த மேலாதிக்க வாதிகள் தமிழ்ப் பிரச்சனையைக் காட்டி சிங்கள மக்களையும் அடக்கி ஒடுக்கி அவர்களைச் சிந்திக்க விடாமல் தொடர்ந்து தங்கள் ஆட்சி அதிகாரத்தைக் தக்க வைத்துக் கொண்டு வருகின்றனர். தமிழ் இந்து மேலாதிக்கவாதிகள் அதையே தமிழர்கள் மத்தியில் செய்து வருகின்றனர்.

உலகம் பூராவும் எங்கள் பிரச்சனையை எடுத்துச் சென்ற நாங்கள் அருகிலிருந்த சிங்கள மக்களிடம் இன்றைய நாள் வரை அணுகவேயில்லை. அணுகுவதற்கு விடாமல் மேலாதிக்க வர்க்கம் அவரவர் மொழியைப் பாவித்துக் கொண்டது. சகோதர மொழியைப் படிக்க மறுத்த தன்மானத் தமிழன் இன்று பரதேசிகளாக-அகதிகளாக-இரண்டாந்தரப் பிரஜைகளாக தங்கள் சந்ததிகளை வேற்று மொழி பேசும் இரண்டும் கெட்டான் இனமாக உற்பத்தி செய்து கொண்டிருந்தபடி தமிழீழம் கேட்கிறான்.

எமது பிரச்சனை மொழியல்ல. மொழியைக் காட்டி மக்களை உசுப்பேத்தும் சிங்கள-தமிழ்மேலாதிக்கவாத மேட்டுக்குடியினர் பல்கலைக்கழகங்களில் சுயமொழி பாடத்திட்டத்தை பற்றி சிந்திக்கவே இல்லை. சிந்திக்கவும் மாட்டார்கள். காரணம் ஆங்கிலம் இல்லாவிட்டால் அவர்களால் அந்நியரை அண்டிப் பிழைக்க முடியாது.

சிங்கள-தமிழ் மேட்டுக்குடி வர்க்கத்தினர் இடையே ஏற்பட்ட பொருளாதாரப் போட்டிதான் பிரச்சனை. அதனை மூடி மறைக்கத்தான் மொழி வெறி ஊட்டப்பட்டது.

கடந்த 66 வருட காலத்தில் சிங்களவன் தமிழனுக்குச் செய்த அநியாயங்களை விட தமிழன் தமிழனுக்கு-முஸ்லீம்களுக்கு-மலையக மக்களுக்கு இழைத்த அநியாயங்கள்தான் அதிகம். சற்று ஆற அமர இருந்து சிந்தித்துப் சீர்தூக்கிப் பார்த்தீர்களானால் இது உங்களுக்கு நன்கு புரியும்.

இன்று நடைமுறையில் உள்ள ஜனநாயகத்தில் சிங்கள-தமிழ்-இஸ்லாம்-மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் யாவரும் மேலாதிக்கவாத சிந்தனையுடைய மேட்டுக்குடியினரே. அவர்கள் தங்களுக்குள் அதிகாரத்தைப் பங்கு போடும் வழிமுறையாகவே இன்றைய ஜனநாயகம் விளங்குகிறது.

ஜனநாயகம் மக்களுக்கு உரியதாக மாற்றி வரையப்படல் வேண்டும். அதன் ஊடாகவே நமக்கு நல்லது நடக்கும். பிரித்துப் பிரித்து வைத்து - சந்தேகக் கண்களுடன் - மற்றவர் மேல் பழி சுமத்தி - சொந்த நலனுக்காக ஒற்றுமைக்கான சகல கதவுகளையும் இழுத்து மூடி இதுவரை அழிந்தது போதும்.

எம்மைப் போல் அனுபவப்பட்ட அல்லல்பட்ட சிங்கள சகோதரர்கள் தாங்கள் விட்ட தவறுகளில் இருந்து கற்றுக்கொண்டு எங்களுடன் இணைந்து "தீர்வு" என்ற இலக்கை எட்டுவோம் என்ற திடசங்கற்பத்துடன் எம்முடன் தோளோடு தோள் கொடுத்து உழைக்கிறார்கள். ஒன்றுபடுவோம்-உறுதியுடன் உழைப்போம்-உலகை மாற்றுவோம்.

4 ஆம் பக்க தொடர்ச்சி

தமது வர்க்க உரிமைகளை வென்றுகொள்வதற்காக உண்மையாகவே ஒன்றிணைய வேண்டுமாயிருந்தால், அதன் இன்றியமையாத பகுதியாக முதலில் ஆதிக்க சக்திகளின் ஏகபோக அரசாங்கத்தினால் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும்- பேசப்படக் கூடாத விடயமாகவே கையாளப்படும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கு சம உரிமைகளைப் வென்றெடுக்கும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

அதாவது இலங்கையில் பொருளாதார அடிப்படையில் ஏழைகளாக வாழும் அனைத்து இன மக்களின் வாழ்வை மேம்படுத்தும் விடுதலைப் போராட்டம் நடத்த வேண்டுமானால், அதற்கான முன் நிபந்தனைகளில் முக்கியமானது, ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் உரிமைக்கான போராட்டமாகும்.

இந்த வகையில், இன்று இலங்கையில் புரையோடியுள்ள பேரினவாதம் மற்றும் அதன் விளைவாய் உருவாகியுள்ள தமிழ் குறுந்தேசியவாதத்தை எதிர்ப்பது, மற்றும் இன-மத ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுவது உடனடியான தேவையாக உள்ளது. இன்றுள்ள அரசியற் சூழ்நிலைக்குள் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கான சம உரிமைகளைப் பெறப் போராடுதல் என்ற "குறுகிய" காலத் திட்டத்தை முன்னெடுப்பதன் மூலம், பெரும்பான்மையாக இலங்கையில் வாழும் சிங்கள மக்கள் தமது இனவாதச் சிந்தனையில் இருந்து விடுபட்டு, ஒடுக்கப்பட்ட சக தேசிய இனங்களின் நம்பிக்கையை - சகோதர வாஞ்சையை பெற்றுக் கொள்ள முடியும்.

அதேவேளை இக்குறுகியகாலத் திட்டத்துடன் மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களின் அபிலாசைகளையும் உள்ளடக்கும் நோக்கில்- ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கான சம உரிமைப் போராட்டம் - தற்போதைய மைத்திரி அரசு போன்ற அரசுகளின் எலும்புத் துண்டுத் தீர்வுகளுடன் திருப்திப்படாது, மனித சமூகத்துக்குள் சமத்துவமின்மையை நிர்மாணித்ததும், மனிதனால் மனிதன் சுரண்டப்படுவதை அடிப்படையாகக் கொண்டதும், தனியார் சொத்துடைமையைக் கொண்டதுமான சமூகமுறையை ஒழித்துக்கட்டும் வரை நீடிக்கும் விரிவான போராட்டமாக இருக்க வேண்டும். மனிதர்களுக்குள் சமத்துவமின்மையை உருவாக்கும் மூலகாரணிகளை தகர்த்தெறியக்கூடிய புதிய சமூக முறையொன்றின் மூலம் மாத்திரமே ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களால் தமது உரிமைகளை உண்மையாகவே பெற்றுக்கொள்ள முடியும்.

## தேசிய இனப் பிரச்சனை சார்ந்த எமது கொள்கை நிலைப்பாடு

சகல மக்கள் சமூகங்களுக்கும் ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் உறுதிப்படுத்தி, ஜனநாயக மத்தியத்துவ அடிப்படையில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் சாத்தியப்பாடான செயற்பாடுகள் கீழே குறிப்பிடப்படும் அடிப்படை கொள்கைகளை ஆதாரமாக கொண்டுள்ளது.

தேசிய இனப் பிரச்சினை சார்ந்த எமது கொள்கை நிலைப்பாடானது, ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு உச்சபட்சமான சுயாட்சி அதிகாரத்தை வழங்கி, அவர்களின் பொருளாதார மற்றும் சமூககலாச்சார அபிவிருத்தியினை பெற்றுக் கொள்வதற்கான மிகவும் விஞ்ஞானபூர்வமான வழிகளை ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையிலான அரசு கடைப்பிடிக்கும் எனக் கூறுகிறது.

## எமது கொள்கை நிலைப்பாட்டின் சில முக்கிய புள்ளிகள்:

1. இன மத அடையாளங்களை அடிப்படையாக கொண்ட அரசியல் பிளவுகளுக்கு மாற்றாக அனைத்து தேசிய இனப்பிரிவுகளும் சோஷலிஸ அரசாங்கத்தில் சமத்துவம் மற்றும் ஜனநாயக அடிப்படையில் ஒன்றுபட்டு வாழ்வதற்கு தேவையான நிலமைகளை உறுதிப்படுத்துவதனூடாக மட்டுமே அனைத்து மக்கள் பிரிவினரதும் சமமான அபிவிருத்தியை பெற்றுக்கொள்ள முடியும்.

2. பல்வேறு மக்கள் பிரிவினரிடையே உண்மையான சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதோடு, பொருளாதார மற்றும் சமூக கலாசார அபிவிருத்தியினை பெற்றுக் கொள்வதற்கான நோக்கத்தை வரையறுத்து கொள்வதில் மிகவும் விஞ்ஞானபூர்வமான பரந்த பிரதேச சுயாட்சி உறுதி செய்யப்பட வேண்டும். மத்தியத்துவப்படுத்தப்பட்ட அரசிற்கும் பிரதேச சுயாட்சி பிரதேசத்திற்கும் இடையே முழுமையான செயற்பாடுகளில் ஜனநாயக மத்தியத்துவம், தத்துவ பயன்பாட்டு செயற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும்.

3. ஜனநாயக மத்தியத்துவ தத்துவத்தின் அடிப்படையில் சகல தேசிய இன சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பரந்த உழைக்கும் மக்கள் மற்றும் சகல அடக்கப்படுகின்ற மக்களினதும் ஜனநாயக உரிமைகள் நிறைவேற்றப்படும் வகையில் புதிய அரசியல் அமைப்பு முறை வெகுஜன அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும்.

4. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

5. சகல சட்ட நடவடிக்கைகள், அரச தீர்மானங்கள், அறிவித்தல்கள், கட்டளைகள் என்பன சகல தேசிய மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டும்.

6. கல்விச் செயற்பாடுகளின்போது தமது தாய்மொழியிலோ அல்லது தான் விரும்பும் எந்தவொரு தேசிய மொழிகளிலோ கல்வியை பெற்றுக்கொள்வதற்கு சகல தேசிய இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல பிரஜைகளுக்கும் இருக்கும் உரிமை சோசலிச அரசியல் அமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

7. அரசாங்கத்துடன் தனது தாய்மொழியிலோ அல்லது தான் விரும்பும் எந்தவொரு தேசிய மொழியிலோ தொடர்புகளை பேணுவதற்கு சகல பிரஜைகளுக்கும் உள்ள உரிமை ஏற்றுக்கொள்ளப்படுவதோடு அதனை செயற்படுத்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

8. மொழி வேறுபாட்டின் அடிப்படையில் சமூக பொருளாதார அரசியல் ரீதியில் எந்தவொரு வேறுபாடுகளும் எந்தவொரு பிரஜைக்கும் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வது, அரசின் கடமையாக அமைவதோடு அதற்கான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

9. சகல பிரஜைகளும் தேசிய மொழிகளை பயன்படுத்துவதில் சமமான உரிமையினை அனுபவிப்பதற்கு தேவையான ஒழுங்குவிதிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

10. தேசிய இனங்கள் ஒன்றோடு ஒன்று ஒருங்கிணையும் செயற்பாடு சமூக பொருளாதார சமூக கலாச்சார தளத்தில் பாட்டாளி வர்க்க கண்ணோட்டத்தில் மேற்கொள்ளப்படுவதற்காக விரிந்த ஜனநாயக வேலைத்திட்டத்தை அடிப்படையாக கொண்ட செயற்பாடுகள் பொறுப்பேற்கப்பட வேண்டும்.

11. ஒரு தேசிய இனத்தினால் இன்னொரு தேசிய இனத்தையோ, ஒரு சாதியினரால் இன்னொரு சாதியினரோ சமூகரீதியில் பிளவுபடுத்துவதை முற்றாக இல்லாதொழிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதோடு அதனூடாக இனவாதம் மற்றும் சாதிவாதம் என்பவற்றை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு தீர்மானகரமானதும் இறுதியானதுமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

12. இலங்கையில் பிரஜாவுரிமை வழங்கப்படாத பெருந்தோட்டத்துறையில் தொழில்புரியும் தமிழ் தொழிலாளர்களுக்கு பிரஜாவுரிமையினை பெற்றுக்கொடுப்பதற்காக அவசியமான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த மக்கள் முகம் கொடுத்து வரும் சமூகப் பொருளாதார அரசியல் மற்றும் கலாச்சார முரண்பாடுகளை களைவதற்கு அவசியமான வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

13. சகல தேசிய இனங்களினதும் கலாச்சார அடையாளங்களை பாதுகாப்பதற்கு வகை செய்வதோடு, தேசிய இனங்களினது கலாச்சார அடையாளங்கள் மீது மேற்கொள்ளப்படும் அனைத்து மேலாதிக்க மற்றும் ஆக்கிரமிப்புகள் நிறுத்தப்படுவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

14. எந்தவொரு தேசிய இனப்பிரிவினருக்குள்ளும் வரலாற்று ரீதியாக கட்டியெழுப்பட்டிருக்கும் மேலாதிக்கவாத மனோநிலை மற்றும் இனவாத குழப்பங்களும் இல்லாதொழிப்பதற்கான மனிதத்துவ விஞ்ஞானபூர்வ வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

15. சகல தேசிய இனப்பிரிவினருக்கும் எந்தவொரு பாகுபாடும் அற்ற வகையில் அரசியலில் ஈடுபடுவதற்கு உள்ள உரிமை, சுதந்திரம் என்பன உறுதி செய்யப்பட வேண்டும்.

## நிறைவாக

இலங்கையில் மாறி மாறி ஆட்சி செய்யும் பேரினவாத தலைவர்களும் அவர்களின் கட்சிகளும், ஒடுக்கப்படும் தேசிய இன மக்களுக்கு எக்காலத்திலும் நியாயமான, அம்மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றவல்ல தீர்வினைத் தரப் போவதில்லை. ஒடுக்கப்படும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராடுவதன் மூலம் மட்டுமே எமக்கான தீர்வை நாமே பெற்றுக் கொள்ள முடியும். இந்த வகையில் பொருளாதார அடிப்படையில் நலிவுற்று வறுமையில் வாடும் மக்களுடன் இணைந்து போராடுவதன் மூலமும், அம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இடதுசாரிய சக்திகளை வலிமையான அரசியற் சக்தியாக உருவாக வைப்பதன் மூலமும் மட்டுமே எமது தேசியப் போராட்டத்தை வெற்றியடையச் செய்ய முடியும்.

41/32, கெந்தஹேனவத்தை, தெபானம, பன்னிப்பிட்டிய.
தொலைபேசி/தொலைநகல்: 094-113185692
mpssrilanka@gmail.com, http://www.peoplesstruggle.com

# ஏகாதிபத்தியமும் பயங்கரவாதமும்

கருத்துப் படத்தை முதன்மையாகக் கொண்டு பாரிசிலிருந்து வெளியாகும் ”சார்லி எப்டோ” வாரச் சஞ்சிகை மீதான தாக்குதலில் 12 பேர் பலியானார்கள். இந்த படுகொலைச் செயலானது இன - மத வெறியூட்டும் ஏகாதிபத்தியத்தின் தொடரான பிரச்சாரத்துக்கும், அது சார்ந்த அரசியலுக்கும் வலுச் சேர்த்துள்ளது.

மேற்கில் வாழ்கின்ற இஸ்லாமிய மக்களை இந்த வன்முறை மூலம் எதிரியாக இட்டுக் காட்டுகின்ற பிரச்சாரங்கள் மூலம், ஏகாதிபத்திய கொள்கைகளையும், மூலத்தின் சூறையாடலையும் இலகுவாக்குவதற்கே இந்த வன்முறை உதவுகின்றது.

முன்னாள் கம்யூனிச நாடுகளில் முதலாளித்துவதை மீட்டு அதிகாரத்திற்கு கொண்டு வந்ததன் பின்னர், மக்களுக்கு ஒரு எதிரியைக் காட்ட இஸ்லாமிய பயங்கரவாதத்தை உருவாக்கி வளர்த்தவர்கள் ஏகாதிபத்தியங்களே. 1970 களில் ஆப்கானிஸ்தானில் தொடங்கியவர்கள் இன்று ஈராக், லிபியா, சிரியா வரை, ஏகாதிபத்திய தலையீடுகளை நடத்த இஸ்லாமிய பயங்கரவாதத்தை உருவாக்கினார்கள். ஆயுதம் - நிதிகளை வழங்கியதன் மூலம் உலக பயங்கரவாதத்தை தோற்றுவித்தவர்கள், இந்த ஏகாதிபத்தியங்கள் தான்.

ஏகாதிபத்திய பொருளாதாரத்தை உலகமயமாக்கவும், ஏகாதிபத்திய முரண்பாடுகளை இராணுவ மேலாதிக்கம் மூலம் ஆதிக்கம் செலுத்தவும், தேர்தல் ”ஜனநாயகத்தை” முன்வைத்து அரசுகளை கவிழ்க்கும் சதிகளின் ஈடுபட்டவர்கள் வேறு யாருமல்ல, பயங்கரவாதம் பற்றிப் பேசுகின்ற ஏகாதிபத்தியங்கள் தான். அதை முன்னிறுத்தி பிரச்சாரம் செய்த ஊடகங்களும் தான்.

நாடுகளின் இறைமையையும், மக்களின் இறைமையையும் அழித்து விடும் வண்ணம், பயங்கரவாதத்தை தோற்றுவித்த அதேநேரம், வானில் இருந்து குண்டுகளை போட்டு மக்களை கொல்லுகின்ற ஏகாதிபத்திய பயங்கரவாதமே, இஸ்லாமிய பயங்கரவாதத்தை மேலும் வளர்த்தெடுக்கின்றது.

இஸ்லாம் மற்றைய மதங்கள் போல் ஒரு மதம். எல்லா மதங்களிலும் அடிப்படைவாதம் இருப்பது போல், அது மத ரீதியான வன்முறைகளையே சார்ந்து இருப்பது போல், இஸ்லாம் பெயரிலும் வன்முறையும், பயங்கரவாதமும் காணப்படுகின்றது.

இஸ்லாமிய மத வன்முறைகளும், மதப் பயங்கரவாதமும் இன்று உலகமயமாதலில் கூர்மை அடைந்து இருப்பதும், அந்த மதத்தின் தனி இயல்பல்ல. மாறாக ஏகாதிபத்திய பயங்கரவாதம் இஸ்லாமிய மக்கள் அதிகமாக வாழும் நாடுகளின் பொருளாதார வளங்களைச் சூறையாடவும், பிற ஏகாதிபத்திய போட்டியை தடுக்கவும் கையாளும் அதன் ஜனநாயக விரோத கொள்கைகளே காரணமாக இருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் இஸ்லாமிய பயங்கரவாதக் குழுக்களை தோற்றுவித்து, இதற்கு ஆயுதம் நிதி வழங்கியவர்கள் இந்த ஏகாதிபத்தியவாதிகள்தான்.

தனிப்பட்ட மனிதனின் உரிமையாக மத வழிபாடு இருக்க முடியுமே ஒழிய, மதம் சமூகத்தை வழிநடத்த முற்படும் போது பயங்கரவாதமாக அது மாறுகின்றதை காணமுடியும். இது எல்லா மதங்களுக்கும் பொருந்தும்.

எழுத்துச் சுதந்திரம் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பது, ஜனநாயகத்தை நேசிக்கின்றவர்களின் கடமை. எழுத்துச் சுதந்திரம் சமூகத்துக்கே ஒழிய, அது தனிமனிதனின் தனிப்பட்ட வக்கிரமாக மாறும் போது, ஏகாதிபத்தியம் சார்பான எழுத்து பயங்கரவாதமாகி விடுகின்றது. எழுத்துச் சுதந்திரம் மக்கள் கூட்டத்தின் நம்பிக்கையை கேவலப்படுத்த முடியாது. மாறாக மக்களுக்கு பகுத்தறிவு பூர்வமாக அறிவூட்டுவதும், மக்களின் சமூக பொருளாதார விடுதலைக்கு வழிகாட்டுவதன் மூலம், அவர்களை சுமைகளில் இருந்து விடுவிப்பதுமே எழுத்துச் சுதந்திரமாகும்.

ஆயுதம் மற்றும் நிதி மூலம் இஸ்லாமிய பயங்கரவாதத்தை தோற்றுவிக்கும் ஏகாதிபத்திய கொள்கைக்கு நிகரானது, எழுத்துச் சுதந்திரம் மூலம் தூண்டுகின்ற பயங்கரவாதம்.

முகமது நபியை நிர்வாணமாக்கி முன்னிறுத்தி எழுதுவதன் பின்னால், ஏகாதிபத்திய நோக்கம் இருக்கின்றது. அது இஸ்லாமிய பயங்கரவாதத்தை ஊக்கப்படுத்துவதே.

பாரிஸ் சார்லி எப்டோ” மீதான வன்முறை ஏன் என்ற கேள்வி கேட்டு அணுகவேண்டும்.

இடதுசாரி முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் தோழர் துமிந்த நாகமுக யாழ்நகர் பஸ்நிலையம் முன்பாக துண்டுப்பிரசுர விநியோகத்தில்...












யாழ்ப்பாண ஊடக மையத்தில் இடதுசாரி முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைமைத் தோழர்கள் பங்கு கொண்ட ஊடக மாநாடு...









ஜனாதிபதி தேர்தலின் இறுதிப்பிரச்சார நாளான அன்று கடவத்தையில் நடாத்தப்பட்ட கூட்டத்தின் காட்சி..















ஜனாதிபதி தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் யாழ் குடாநாட்டிலும் கிளிநொச்சியிலும் முன்னிலை சோஷலிசக்கட்சி தோழர்கள் துண்டுப்பிரசுரம் விநியோகம் செய்தபோது...

41/32, கெந்தஹேன வத்தை, தெபானம, பண்னிபிட்டிய் வசிக்கும் ஜுட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.

படிப்பகம்